# முகவுரை

புதுடில்லியைச் சேர்ந்த ஜகோரி (JAGORI) என்ற நிறுவனம் 400க்கும் மேற்பட்ட சமூக செயல்பாட்டாளர்களையும் மேம்பாட்டு பணியாளர்களையும், அரசுசாரா தொண்டு நிறுவனங்களையும் ஒன்றிணைத்து சங்கத் என்ற தெற்காசிய அளவிலான வலையமைப்பினை உருவாக்கியது. சங்கத் தெற்காசியப் பகுதியில் அமைதியையும், வளர்ச்சியையும் ஊக்குவிக்கும் வகையில் பாலியல் சமத்துவத்தை வலுப்படுத்தும் நோக்கத்தில் பல கருத்தாய்வுகளையும், பயிற்சிகளையும் ஒருங்கிணைத்து வருகிறது. இச்செயல்பாட்டின் ஓர் அம்சமாக பெண் செயல்பாட்டாளர்களை இணைத்து பாலியல் மற்றும் மேம்பாடு குறித்த பயிற்சியை தமிழ் மொழியில் நடத்தும் பொறுப்பை தொடர்ந்து ஏக்தாவிடம் அளித்து வருகிறது. இதன் அடிப்படையில் ஏக்தா (EKTA), சங்கத் (SANGAT) நிறுவனங்கள் இணைந்து பத்து நாட்கள் பயிற்சியினை நடத்தின.

ஏக்தா என்னும் பெண்களுக்கான ஆதார மையம் 1990-ம் ஆண்டு முதல் மதுரையை மையமாக கொண்டு செயல்பட்டு வருகிறது. சமத்துவ சமுதாயத்தைக் குறிக்கோளாகக் கொண்டு பெண்களின் முன்னேற்றத்திற்காகச் செயல்பட்டு வரும் இந்நிறுவனம், கிராம மற்றும் நகர்ப்புற ஏழை பெண்கள் மத்தியில் திறன் வளர்ப்பு பயிற்சிகள், பள்ளி மாணவ, மாணவியர்கள் மத்தியில் வாழ்க்கை கல்வி வகுப்புகள் நடத்துதல், கல்லூரி மாணவ, மாணவியர்கள் மத்தியில் விழிப்புணர்வு முகாம்கள் நடத்துதல், ஆவணத்தொகுப்பு மற்றும் பிரச்சாரம் போன்ற செயல்பாடுகளில் ஈடுபட்டு வருகிறது. 2004 சுனாமிக்கு பின் கடலூர் மாவட்டம் சிதம்பரம் தாலுகா கிள்ளை பேரூராட்சியை சுற்றியுள்ள கிராமங்களில் ஏக்தா தனது களப்பணியை மேற்கொண்டு வருகிறது. சுனாமியால் பாதிக்கப்பட்ட 30 ஆதரவற்ற பெண் குழந்தைகள் தங்கள் கல்வியை தொடர ஏக்தா நம்பிக்கை மையம் உதவுகிறது.

ஆணாதிக்கம், பெண்ணியம் மற்றும் பெண்கள் இயக்கங்கள் குறித்த கருத்தாக்கம் மற்றும் அறிமுகம், பாலியல் மற்றும் ஆண்தன்மை, சமீபத்திய வளர்ச்சி மேம்பாட்டு போக்குகள், வறுமை மற்றம் பாலியலில் ஏற்படுத்தி வரும் தாக்கங்கள், பெண்களுக்கெதிரான வன்முறைகள், பாலியலும் நலவாழ்வும், பெண்களின் மனநலம், இராணுவமயமாக்கல், சர்வதேச உடன்படிக்கைகள், வலையமைப்பு குறித்து விவாதித்து, எண்ணத் தெளிவைப் பங்கேற்பாளர்களிடம் உருவாக்கிட இப்பயிற்சி முனைந்தது.

பயிற்சியில் பங்கேற்றவர்களுக்கு மட்டுமல்லாமல் மற்ற செயல்பாட்டாளர்களுக்கும், இதர பயிற்சியாளர்களுக்கும் பயன்படும் வகையில், பயிற்சி குறித்தான இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

திருமிகு பிம்லா சந்திரசேகர்
இயக்குனர், ஏக்தா.

# பயிற்சி - ஓர் அறிமுகம்

இன்றைய உலகில் ஆணுக்கு நிகராக பெண்கள் அனைத்து துறைகளிலும் தடம் பதித்து முன்னேறி வருகின்றனர். விண்வெளி வீராங்கனையாக, மருத்துவராக, பொறியாளராக, விமான ஓட்டியாக என பல துறைகளிலும் பெண்கள் முன்னேறியுள்ளனர். வேலைவாய்ப்பிலும் 30 சதவீதம் அவர்கள் எட்டிவிட்டனர். குறிப்பாக இந்தியாவில் பஞ்சாயத்து அரசியலில் 33 சதவிகித இடஒதுக்கீடு அளிக்கப்பட்டதன் மூலம் அரசியலில் பெண்களின் பங்கேற்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இது 50 சதவிகிதமாக உயர்த்தப்பட உள்ளது. பெண்கள் முன்னேறி வரும் அதே வேளையில் குடும்பத்தில், பணியிடங்களில், பொது இடங்கள் என பெண்கள் மீதான வன்முறைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. வரதட்சணை, பாலியல் கொடுமை, குடும்ப வன்முறை, கருக்கொலை, சிசுக்கொலை, கௌரவக்கொலை என பெண்களுக்கெதிரான வன்முறைகளின் வடிவங்கள் பல. மேலும் உலகமயமாக்கல், தனியார்மயமாக்கல், இயந்திரமயமாக்கல் மற்றும் இராணுவமயமாக்கல் போன்ற வளர்ச்சி தொடர்பான விஷயங்கள், வறுமை பெண்ணியமயமாக்கப்படுதல், பெண்கள் மற்றும் குழந்தைகள் கடத்தப்படுதல், பெண்கள் நுகர்வுப்பொருளாக மாற்றப்படுதல் ஆகியவற்றிற்கு காரணமாக அமைகின்றன.

இத்தகைய சூழலில், பெண்களின் உரிமையும் மனித உரிமையே என்பதை புரிய வைக்கவும், பாலியல் மற்றும் மேம்பாட்டுடன் தொடர்புப்படுத்தி மனித உரிமைக் கண்ணோட்டத்துடன் அணுக வேண்டியது மிக அவசியமாகும். இந்தக் கண்ணோட்டத்தை மெருகேற்றிடும் வகையில் பெண் சமூக செயல்பாட்டாளர்கள் மற்றும் பயிற்சியாளர்களுக்குப் ‘‘பாலியல் மேம்பாடு குறித்த பயிற்சி’’, மார்ச் 1 முதல் 10 வரை, மதுரை பல்லோட்டி மையத்தில் நடத்தப்பட்டது.

## பயிற்சியின் சிறப்பம்சங்கள்:

இலங்கையைச் சார்ந்த 18 பெண் செயல்பாட்டாளர்களும், தமிழகத்தைச் சார்ந்த 12 பெண் செயல்பாட்டாளர்களும் இப்பயிற்சியில் கலந்து கொண்டனர். ‘‘தமிழ் மொழியில்’’ இப்பயிற்சி நடத்தப்பட்டது. இந்த 10 நாள் பயிற்சியில் பங்கேற்பாளர்கள் அனைவரும் பயிற்சி மையத்திலேயே தங்கி இருக்க வேண்டும் என்ற நிபந்தனை, கற்றலை ஆழப்படுத்தியது. பயிற்சி அரங்கத்தினுள் மட்டுமல்லாமல் வெளியிலும், பகிர்வையும், கற்றலையும் ஊக்கப்படுத்தியது.

தற்போது இலங்கையில் உள்ள தமிழர்களின் நிலை குறித்தும் அவ்வப்போது விவாதிக்கப்பட்டது. சமுதாயப் பணியில் முழுமையாக ஈடுபட்டு தன்னைப் பற்றி கூட சிந்திப்பதற்கான நேரமில்லாத பெண் செயல்பாட்டாளர்களுக்கு, குறிப்பாக இலங்கையிலே இனப்போரில் பாதிக்கப்பட்டதால் ஏற்பட்ட மன இறுக்கத்திலிருந்தும், சோர்விலிருந்தும் தங்களை விடுவித்துக் கொள்வதற்கு ஒரு வாய்ப்பாக இப்பயிற்சி அமைந்தது.

கண்ணுக்கு எட்டிய தூரம் வரை இயற்கை வளங்கள் நிறைந்த அமைதியான, ரம்யமான, பசுமை நிறைந்த, புத்துணர்ச்சி அளிக்கக் கூடிய இடமாக பயிற்சி மையம் அமைந்திருந்தது. தங்குமிடம், போக்குவரத்து, உணவு வசதி, மருத்துவத்தேவைகள் மற்றும் பயிற்சி நடைபெறுவதற்கான அனைத்து வசதிகளையும் ஒருங்கிணைப்பதற்காக திருமிகு. உமாதேவி அவர்கள் நியமிக்கப்பட்டிருந்தது சிறப்பம்சம் ஆகும்.

**பயிற்சியாளர்கள்:**

**திருமிகு காந்திமதி:** இவர் LAW Trust நிறுவனத்தில் இயக்குநர். அத்துடன், நாகப்பட்டினத்தில் இயங்கி வரும் சிநேகா நிறுவனத்தின் மூலம் மீனவர்களின் வாழ்வுரிமைக்காகத் தொடர்ந்து குரல் கொடுத்து வருபவர். சிறந்த பெண்ணிய சிந்தனைவாதி. பல ஆண்டுகளாக பயிற்சி நடத்தி வரும் சிறந்த பயிற்சியாளர்.

**திருமிகு பிம்லா சந்திரசேகர்:** EKTA நிறுவனத்தின் இயக்குநர். உலகின் பல தரப்பட்ட மக்களுக்கும் பல்வேறு தலைப்புகளில் பயிற்சி அளிப்பதில் தேர்ந்தவர். முக்கியமாக பாலியல் பயிற்சியளிப்பதில் சிறந்த பயிற்றுநர்.

**திருமிகு கேப்ரியலே:** NAPM அமைப்பில் ஒருவர். இவர் ஆங்கிலோ இந்தியன் ஆவார். ஆய்வாளர், எழுத்தாளர், இறையியல் கல்லூரியில் பேராசிரியையாக பணியாற்றியவர். மதுரையில் சமூக பகுப்பாய்வு நிறுவனத்தை நடத்தி வருபவர்.

**திருமிகு ரேவதி:** காந்தி கிராம அறக்கட்டளையில் கிராம வளர்ச்சி திட்டத்தின் இயக்குநராகப் பணியாற்றுபவர். நலவாழ்வு, பாலியல், அரசியல் குறித்த பயிற்சிகள் அளிப்பதில் சிறந்த பயிற்சியாளர்.

**திருமிகு செல்வமணி:** இவர் மிகச்சிறந்த பெண் மனநல மருத்துவர். மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் மனநல மருத்துவராகவும், மதுரை மருத்துவ கல்லூரியில் பேராசியையாக உள்ளவர்.

**திருமிகு ஷீலு :** இவர் "தமிழ்நாடு பெண்கள் இணைப்புக்குழு" நிறுவனத்தை உருவாக்கி தமிழக பெண்களின் தலைமைத்துவத்தை வளர்த்து வருபவர். இவர் "உலக சமூக மாமன்றத்தின்" ஒருங்கிணைப்பு குழுவிலும் உள்ளார். உலகமயமாக்கத்தினால் பெண்களுக்கு ஏற்பட்டுள்ள தாக்கம் குறித்து ஆழமான கருத்தியல் பார்வை உடையவர். பிரச்சார யுக்திகளை வடிப்பதிலும், போராட்டங்களில் முன்னிற்கும் போராளியான இவர், சிறந்த பயிற்சியாளராகவும் உள்ளார்.

**திருமிகு பவளம்:** இவர் மிகச்சிறந்த மனநல ஆலோசகர். பெண் கருக்கொலைக்கு எதிரான பிரச்சாரத்தில் பல ஆண்டுகள் தலைமை பொறுப்பு வகித்தவர். தற்போது ஏக்தாவின் ஆய்வு செயல்பாடுகளில் ஈடுபட்டு வருபவர்.

**திருமிகு பாண்டிமா தேவி:** படிக்கும் பருவத்திலிருந்தே மாணவர்களுக்காக பல போராட்டங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். சட்டம் பயின்றுள்ள போதும் பெண்ணுரிமை செயல்பாட்டாளராகத் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருப்பவர்.

**திருமிகு. சாந்தி சிவநேசன்:**

**இவர் இலங்கையை சார்ந்தவர். பெண்ணுரிமைக்கு தொடர்ந்து குரல் கொடுத்து வருபவர்.**

**திருமிகு பத்மா என்ற மங்கை:** இவர் சென்னை Stella Mary's கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றி வருகிறார். பெண்ணிய சிந்தனையாளர். பெண்ணிய கருத்துக்கள் அடங்கிய ஆவணங்கள் தயாரித்தல், நாடகங்கள் இயற்றுதலில் ஈடுபட்டு வருகிறார். பெண்ணிய கருத்துக்களை நாடக வடிவில் மக்களிடம் எடுத்துச்செல்வதற்கு, செயல்பாட்டாளர்களைப் பயிற்றுவிப்பவர்.

## துவக்க நிகழ்வு:

1.03.2012 அன்று காலை 9.30 மணியளவில் பயிற்சி துவக்க நிகழ்வு நடைபெற்றது. இதில் 30 பங்கேற்பாளர்கள், சிறப்பு பேச்சாளர்கள் திருமிகு பிம்லா சந்திரசேகர், திருமிகு காந்திமதி மற்றும் உள்பட 33 பேர் கலந்து கொண்டனர். அவர்கள் அனைவரையும் திருமிகு பிம்லா அவர்கள் வரவேற்று, இந்த பத்து நாள் பயிற்சியின் நோக்கம் மற்றும் செயல்பாடுகள் குறித்து அறிமுக உரை ஆற்றினார். திருமிகு காந்திமதி அவர்கள் பங்கேற்பாளர்களின் சுயஅறிமுகத்தினை துவக்கி வைத்தார். பங்கேற்பாளர்கள் தங்களின் பெயர், தங்கள் பணிபுரியும் நிறுவனம் மற்றும் பணிகள் குறித்து கூட்டத்தில் பகிர்ந்து கொண்டு தங்களை சுய அறிமுகம் செய்து கொண்டனர்.

## பயிற்சியின் நோக்கங்கள்:

- பயிற்சி கருத்தாளர்கள், பலத்துறைகளில் சிறப்பாக செயல்பட்டு வரும் பெண்களுக்கும் பெண் செயல்பாட்டாளர்களிடையேயான ஒரு அனுபவ பகிர்வின் மூலம் பெண்களை முன்னேற்றம் பெற செய்தல்.
- பால்நிலை, அமைதி, வளர்ச்சி, நீதி மற்றும் மனித உரிமைகள் குறித்தும் இவற்றிற்கு இடையேயான தொடர்புகள் குறித்தும் எண்ணத்தெளிவை வளர்த்தெடுத்து வலுவூட்டல்.
- உலகமயமாதல், தனியார்மயமாதல் மற்றும் இராணுவமயமாதல், அரசியல் அடையாளங்கள் அமைதியை மேம்படுத்துவது போன்ற தகவல்களை பகிர்ந்து பெண்ணிய பார்வையை மேம்படுத்துவது.
- சுய விழிப்புணர்வு, தன்னம்பிக்கை, பகுப்பாய்வு, தகவல் பரிமாற்றம் பயிற்சி மேம்பாடு குறித்து பங்கேற்பாளர்களின் திறன்களை வளர்தெடுத்தல்
- தேசிய எல்லைகள் கடந்து பாலியல் சமத்துவத்துக்கும், சமாதானத்துக்கும் ஆதரவு திரட்டி வழக்குரைத்திட ஒத்துழைப்பையும் ஈடுபாட்டையும் வளர்த்தெடுக்கவும், அனுபவத்தின் அடிப்படையில் கற்றலை வளர்த்தெடுக்கவும் தளம் அமைத்துக் கொடுத்தல்.

பங்கேற்பாளர்கள் பயிற்சி குறித்த தங்களது எதிர்பார்ப்புகளை எழுதும்படி கேட்டுக் கொள்ளப்பட்டனர். அனைத்து எதிர்பார்ப்புகளும் தொகுக்கப்பட்டது. எதிர்பார்ப்புகளுக்கும், ஏற்கனவே பயிற்சி குறித்து திட்டமிட்ட பொருளடக்கத்திற்கும் இடைவெளியில்லாதது உணரப்பட்டது.

## பங்கேற்பாளர்களின் எதிர்பார்ப்புகள்:

- பெண்ணியம் மற்றும் பெண்ணியத்தின் கொள்கைகள்
- ஆணாதிக்கம் மற்றும் இதைக்குறைக்கும் வழிமுறைகள்
- பெண்களின் உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்படிக்கைகள்
- சவால்களை எதிர்கொள்வதற்கான யுக்திகள் என்னென்ன?
- பெண்களுக்கு எதிரான வன்முறைகள், அதை தடுக்கும் முறைகள் மற்றும் சட்ட ஆலோசனைகள் என்னென்ன?
- விழிப்புணர்வை ஏற்படுத்தும் வழிமுறைகள்
- பாலியல் மற்றும் பாலியல் சமத்துவம் குறித்த திட்டங்கள்
- பெண்களும் அரசியலும்
- கலைத்திறன் மூலம் பெண்களின் உரிமைகளை வழியுறுத்தி பெண்களின் முன்னேற்றம் ஏற்படுத்தும் யுக்திகள்

# பயிற்சியின் வழிமுறைகள்

## 1. கருத்தாக்க அமைப்புகள்:

வெவ்வேறு தலைப்புகளில் பயிற்சியாளர்கள் அமர்வை நடத்தினர். அவரவர் தலைப்புகளில் கருத்துக்கள் வழங்கப்பட்டதுடன், அனுபவப் பகிர்வின் மூலம் கற்றல் மேம்படுத்தப்பட்டது. குழுப்பயிற்சி, குழுவிவாதங்கள், கருத்து விளையாட்டுகள் மூலமாகவும், பாடல்கள் மூலமாகவும் கற்றல் மேம்படுத்தப்பட்டது.

## 2. பட்டி மன்றம்:

ஆணாதிக்கம் நிலைத்து நிற்க காரணம் ஆண்களா? பெண்களா? என்ற தலைப்பில் பங்கேற்பாளர்கள் இரு குழுக்களாக பிரிந்து பட்டிமன்றம் நடத்தினர்.

## 3. பட விமர்சனம்:

மனித உரிமை மீறல்கள், வன்முறைகள், பெண்கள் மற்றும் குழந்தைகளின் உரிமைகள் ஆகியவை குறித்து கருத்துக்களை எளிதாகவும், தெளிவாகவும் புரிந்து கொள்ள ஆவணப் படங்களும், சினிமா படங்களும் தேர்வு செய்து காட்டப்பட்டன. சினிமா படங்களை பல்வேறு கோணங்களில் எவ்வாறு விமர்சனப்படுத்த வேண்டும்; பாலியல் கண்ணோட்டத்துடன் எவ்வாறு அலச வேண்டும்; என்று விளக்கப்பட்டு, பின்னர் திரையிடப்பட்டது. படத்தின் முடிவில் பயிற்சி ஒருங்கிணைப்பாளர் திருமிகு பிம்லா சந்திரசேகர் அவர்கள் கலந்து கொண்டு விமர்சன நிகழ்ச்சியை செழுமைப்படுத்தினார்.

## 4. களப்பணி :

06.03.12 அன்று பயிற்சி பங்கேற்பாளர்கள் களப்பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். திண்டுக்கல் மாவட்டத்தில் அமைந்துள்ள காந்திகிராமம் அறக்கட்டளைக்கு அனைவரும் அழைத்துச் செல்லப்பட்டனர். காந்தி கிராமம் அறக்கட்டளையின் செயல்பாடுகள் பங்கேற்பாளர்கள் தாங்களும் இதுபோன்று செயல்பட தூண்டியது. அனைத்து பங்கேற்பாளர்களும் இந்த களப்பணியில் பங்கேற்றனர்.

## 5. சுற்றுலா மற்றும் ஷாப்பிங்:

குறிப்பாக வெவ்வேறு பகுதிகளிலிருந்து இப்பயிற்சியில் கலந்து கொண்ட பங்கேற்பாளர்கள் மதுரையைச் சுற்றிப் பார்ப்பதற்கான வாய்ப்பாகவும், ஷாப்பிங் செய்வதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்து தரப்பட்டது. முக்கிய சுற்றுலாத் தளங்களான மீனாட்சி அம்மன் கோவில், காந்தி மியூசியம் ஆகிய இடங்களை சுற்றிப்பார்த்து மகிழ்ந்தனர். மேலும் பங்கேற்பாளர்கள் விரும்பிய வீட்டு உபயோக பொருள்களையும், ஆடைகளையும் வாங்கிக் கொண்டு மகிழ்ச்சியுடன் பயிற்சி மையத்திற்கு திரும்பினர்.

## 6. ஆண்மையோ ஆண்மை (அரசியல் அங்கத நாடகம்):

சென்னை மரப்பாச்சி குழுவினர் வழங்கும் ஆண்மையோ ஆண்மை(அரசியல் அங்கத நாடகம்) நாடகம் மதுரை கல்லூரியில் அரங்கேற்றப்பட்டது. இந்த நாடகத்திற்கு பயிற்சியில் பங்கேற்ற அனைத்து பங்கேற்பாளர்களும் கண்டு களிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

# பயிற்சியில் வழங்கப்பட்ட புத்தகங்கள் மற்றும் கருத்துத்தாள்கள்

- பாலியலைப் புரிந்து கொள்வோம்.
- ஆணாதிக்கம்.
- What is a boy? What is a girl?.
- பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான சர்வதேச உடன்படிக்கை - CEDAW.
- குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் - 2005.
- பத்து பெண்கள் மிதிக்கும் சைக்கிள்.
- நமது வாழ்வும் வரலாறு ஆகும்.
- நமது உடல் நமதே (Good Touch, Bad Touch)
- வெள்ளை நாடா பிரச்சார இயக்கம் — புத்தகம்
- பீஜிங் செயல்பாட்டுத்தளம்
- புத்தாண்டு மேம்பாட்டு இலக்குகள் (MDG)
- இந்திய தண்டனைச்சட்டப்பிரிவு 498A குறித்த ஏக்தா வெளியிட்ட ஆய்வறிக்கை( தமிழ் மற்றும் ஆங்கிலம்)
- குடும்பநல நீதிமன்றம் குறித்து ஏக்தா வெளியிட்ட ஆய்வறிக்கை (ஆங்கிலம்)
- HIV/ AIDS குறித்த ஏக்தா வெளியிட்ட ஆய்வறிக்கை (ஆங்கிலம்)
- 16 நாட்கள் செயல்பாடுகள் கைபிரதி
- பெண்கள் தினம் குறித்த கைபிரதி

பயிற்சி உள்ளடக்கத்தில் கூறப்பட்டுள்ள பல்வேறு தலைப்புகளில் பங்கேற்பாளர்கள் தகவல்களையும், கருத்துத்தெளிவையும் பெற்றிட உதவும் வகையில், மேற்கண்ட புத்தகங்கள், கருத்து தாள்கள், மற்றும் சுவரொட்டிகள், கைபிரதிகள் போன்றவை வழங்கப்பட்டன. மேலும் இலங்கையில் வெளியிடப்பட்ட பல புத்தகங்கள் மற்றும் செய்தி மடல்களும் பங்கேற்பாளர்களுக்குள் பகிர்ந்து கொள்ளப்பட்டது.

## ஆணாதிக்கம், பெண்ணியம் மற்றும் பெண்கள் இயக்கங்கள் குறித்த கருத்தாக்கம் மற்றும் அறிமுகம்

**திருமிகு. காந்திமதி**

பாலியல் சமூகத்தில் பல்வேறு அடையாளத்துவத்தை ஏற்படுத்துகிறது. அதாவது, திருமணமான பெண்களிடம் சில அடையாளங்கள் காணப்படுகிறது. அதே போல் சமூகத்தில் கணவனை இழந்த பெண்கள் வெள்ளை உடுப்பு அணிவதும், மொட்டை அடித்து கொள்வதும் ஓர் கலாச்சார ரீதியான கட்டுப்பாடாக இப்பொழுதும் காண முடிகிறது. ஆனால் ஆண்களுக்கென எந்தவொரு அடையாளமும் புகுத்தப்படுவதில்லை. சமயம் என்பது மனிதன் கட்டமைத்தது. அதே போல் பாலியலும் மனிதால் கட்டமைக்கப்பட்து. எனவே அதில் மாற்றத்தைக் கொண்டு வரமுடியும். குழந்தை திருமண தடைச்சட்டம் 1929 வரதட்சணை தடுப்புச்சட்டம் 1961 என பல வித சட்டங்கள் பெண்களை பாதுகாக்கவும் அவர்களின் உரிமையை காக்கவும் அரசால் கொண்டு வரப்பட்டது. நடைமுறையில் இச்சட்டங்கள் எவ்வாறு செயல்படுத்தப்படுகின்றன என்பது பற்றி நாம் சிந்திக்க வேண்டும். இருந்த போதிலும் பெண்கள் இச்சட்டங்களைப்பற்றி புரிந்து கொண்டு தங்களின் உரிமை கோரும் போது தான் தங்கள் வாழ்க்கையில் மாற்றத்தைக் காண முடியும் என்று கூறி பயிற்சியாளர் பயிற்சியை தொடங்கினார்.

பால் மற்றும் பாலியல் என்றால் என்ன அதனுடைய தன்மை குறித்து பங்கேற்பாளர்களிடமே கேட்கப்பட்டது. அதற்கு பங்கேற்பாளர்களின் கருத்துக்கள் பின்வருமாறு

| பால் | பாலியல் |
|---|---|
| உடல் ரீதியான வேறுபாடு | சமூக ரீதியான வேறுபாடு |
| ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையே நிலவுகின்ற உறவுகளைக் குறிப்பதாகும். | சமூகத்தால் கட்டமைக்கப்பட்ட உறவுகளையும் பங்குகளையும் விளக்குகின்ற கருத்தியல் |
| எங்கும் மாறாதது. | இடத்திற்கேற்ப காலத்திற்கேற்ப மாறக் கூடியது. |

**பாலியல் பங்குகள்:**

கரோலின்மோசர் என்கின்ற பெண்ணியவாதியின் கருத்துப்படி, சமூகத்தில் நான்கு விதமான பாலியல் பங்குகள் தேவைப்படுகிறது. அவை உற்பத்தி, மறுஉற்பத்தி, சமூக நிர்வாகம், சமூக அரசியல் போன்றவையாகும்.

**உற்பத்தி:**

மூளை அல்லது உடல் உழைப்பைச் செலுத்தி வருமானம் பெற்றுத் தரக்கூடிய பங்கு உற்பத்தி பங்கு எனப்படும். இதில் பெண்களின் பங்களிப்பு அதிகமாக இருந்தாலும், இது ஆண்களுக்குரிய செயற்பாடாகவே மதிக்கப்படுகிறது.

**மறுஉற்பத்தி:**

மறு உற்பத்தியானது உயிர் உற்பத்தி, சமூக உற்பத்தி என இரண்டு வகைகளாகப் பிரிகின்றது. இதில் உணவு தயாரிப்பது, வீட்டைச் சுத்தம் செய்வது போன்ற வேலைகள் அடங்கும். பண மதிப்பில்லாத இந்த மறு உற்பத்தியானது பெண்களால் மட்டுமே செயல்படுத்தப்படுகின்றது.

**சமூக நிர்வாகம்:**

சமூக நிர்வாகத்தில் பெரிய வியாபாரங்கள் அடங்கும். உதாரணமாக ஏலம் விடுதல், குத்தகைக்கு விடுதல் போன்றவை. இதில் பெண்களின் பங்கு குறைவு, ஆண்களின் பங்கே அதிகமாகும்.

**சமூக அரசியல்:**

அரசியல் பங்கேற்பில் பெண்களின் பங்கு குறைவு. குறிப்பாக அரசியல் கூட்டங்களில், கட்சித் தொடர்பான செயல்பாடுகளில் பெண்கள் அதிகம் ஈடுபடுவதில்லை. அரசியலில் பங்கேற்க அவர்களுக்கு வாய்ப்பும் அளிக்கப்படுவதில்லை. அத்தகைய இடங்களில் அவர்களுக்கு பங்கு இருந்தாலும் பெண்கள் என்ற ஒரே காரணத்தினால் பின் தள்ளப்படுகின்றனர். ஆண், பெண் சமத்துவம் ஏற்பட இந்நான்கு பங்கீடுகளிலும் இருவரும் சமமான பங்களிப்பினை வழங்க வேண்டும்.

**பாலின பாத்திரங்கள்:**

**ஆண்:**

வெளிவேலை, வெளிப்பயையான வேலைகளில் ஈடுபடுதல்.

அதிக கூலி பெறுதல்.

சொத்துரிமை உண்டு

அரசியலில் ஈடுபாடு

உயர் மதிப்பீடு

முடிவு எடுத்தல் போன்றவை சமூக ரீதியாக ஆண்களின் செயல்பாடுகளாக அங்கீகாரம் பெற்றுள்ளது.

**பெண்:**

ஆண்களை விட கூலி குறைவு

பெண்களின் வேலைக்கு சமூகத்தில் அங்கீகாரம் கிடையாது.அவை ஊதியமற்றவையாகவே கருதப்படுகிறது.

சொந்தங்களை பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல்

குடும்ப விஷேம் மற்றும் சமூக விழாகளில் கலந்து கொள்ளல்.

வீட்டை தூய்மை செய்தல் மற்றும் குழந்தை பராமரிப்பு ஆகியவை பெண்கள் பாத்திரமாக கருதப்படுகிறது.

**பாலின செய்கைகள்:**

**பெண்:**

பவ்யம், நீளமுடி, குழந்தையை கவனிக்க வேண்டும், அரவணைக்க வேண்டும், தியாகம், வெட்கம், அடக்கம், பொறுமை, எதையும் கேள்வி கேட்கக்கூடாது.

**ஆண்:**

வீட்டிற்காக சம்பாதிக்க வேண்டும், கடினமாக நடந்து கொள்ள வேண்டும், முடிவு எடுப்பதில் தலைமை பொறுப்பை வகித்தல்.

**பாலின பாகுபாடு:**

ஒரே மாதிரியான பாலின செய்கைகளும் பாலின பாத்திரங்களும் சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டு பின்பற்றி வருவதே. பாலின பாகுபாட்டிற்கு காரணமாகும்.

**பாலின பாகுபாட்டை அளக்கும் கருவிகள்:**

தலைமைத்துவம், முக்கியத்துவம், அங்கீகாரம், தீர்மானம், வாய்ப்பு, பங்கேற்பு, கட்டுப்பாடு, பாதுகாப்பு ஆகியவை ஆகும்.

**ஆணாதிக்கம் :**

ஒரு பெண்ணின் உடல், உழைப்பு, சிந்தனை, பாலியல், குழந்தையின் பாலினத்தேர்வு ஆகியவற்றில் ஆணை மையப்படுத்தும் கருத்தியல் ஆணாதிக்கம் எனப்படுகிறது. பாலியல் சமத்துவத்தை அடைய ஆணாதிக்க அமைப்பு / கருத்தியல், பங்குகள் மற்றும் தகவுகள் மாற்றப்பட வேண்டும். வளர்ந்த நாடுகளில் பெண்களின் நிலை மேற்போக்காக மாறியுள்ளதே தவிர அங்கேயும் ஆண்களின் அதிகாரத்துவம் தான் மேலோங்கி இருக்கின்றது. எனவே வரலாற்றினைப் பெண்களின் கண்களின் வழியாகப் பார்க்க வேண்டும்.

**ஆணாதிக்கத்தை செயல்படுத்தும் நிறுவனங்கள்:**

குடும்பம், கலாச்சாரம், மதம், ஊடகம், அரசியல், பொருளாதாரம், கல்வி, ஜாதி, இராணுவம், சந்தை, திருமணம், இனம், சங்கம் / தொழில், சட்டத்துறை, நீதிமன்றம், அரசாங்கம் ஆகியவை ஆகும். இந்த ஆணாதிக்கத்தை செயல்படுத்தும் நிறுவனங்களில் காணப்படும் பிரச்சனைகள் மற்றும் தாக்கங்கள் குறித்து குழுவிவாதம் நடைபெற்றது. அதன் சராம்சம் பின் வருமாறு:

| வ.எண் | நிறுவனங்கள் | பிரச்சனைகள் | தாக்கங்கள் |
|---|---|---|---|
| 1. | குடும்பம் | வேலைப்பகிர்வு<br>மும்மைச்சுமை<br>தலைமைத்துவம்<br>தீர்மானம்<br>திருமணம்<br>தங்கி வாழுதல்<br>வேலைப்பளு<br>தீர்மானம் எடுத்தல்<br>பொறுப்ப அதிகம்<br>வளப்பிரயோகம்<br>சுதந்திரமின்மை<br>மறுஉற்பத்தி | வேலைச்சுமை<br>உடல், உளரீதியாக பாதிப்பு<br>வளர்ச்சி முடக்கப்படுகிறது.<br>தலைமைத்துவம்<br>முடிவெடுத்தலில் ஈடுபடுதல் குறைவு<br>வெளியில் செல்ல சுதந்திரமின்மை<br>வேலைபாகுபாடு<br>பதவி வேறுபாடு<br>பூஜை செய்தல்<br>பாலியல் துன்புறுத்தல்கள்<br>உரிமைகள் மறுக்கப்படுதல்<br>கலாச்சார ரீதியான கட்டுப்பாடு |
| 2 | கல்வி | உயர்கல்விக்கான முன்னுரிமை ஆண்களுக்கு மட்டும் வழங்கப்படுதல்.<br>கல்வியின்மை<br>அடிப்படையில் பதவிகள் | பெண்கள் வளர்ச்சி முடக்கப்படுகிறது |

.

| வ.எண் | நிறுவனங்கள் | பிரச்சனைகள் | தாக்கங்கள் |
|---|---|---|---|
| 3 | பொருளாதாரம் | உழைப்புக்கான கூலி<br>வேலைவாய்ப்பு<br>சொத்துரிமை | வேலைக்கான ஊதியமின்மை |
| 4 | சந்தை | ஆண்களுக்கு மட்டுமே இங்கு முன்னுரிமை.<br>பெண்கள், சமூதாயத்தில் சந்தையில் முன்னேறுவதை அங்கிகரிக்கப்படாமை | பெண்களுக்கு வேலை வாய்ப்பு குறைவு<br>ஊதியம் குறைவு |
| 5 | ஊடகம் | ஆணாதிக்க சிந்தனையுடன் ஆண்களின் தலைமை பொறுப்பில் காண்பித்தல்.<br>பெண்களை ஆபாசமாக சித்தரித்தல | பெண்களை மட்டபடுத்தி காட்டுதல், பதவிகளில் ஏற்றத்தாழ்வுடன் காட்டுதல்.<br>இதன் மூலம் பெண்கள் அந்தஸ்து குறைகிறது. |
| 6 | அரசியல் | இடஒதுக்கீடு குறைவு<br>சமூகத்தில் ஆதரவுயின்மை | முடிவு எடுத்தலில்<br>அதிகாரமின்மை |
| 7 | சமூகம் | பாடசாலை<br>கழகங்கள்<br>சங்கங்கள்<br>தொழில் ஸ்தாபனங்கள்<br>தொழில் வழங்குனர்<br>சமயம்<br>கலாச்சாரம்<br>ஊடகங்கள்<br>அரசியல்<br>பொருளாதாரம் | சார்ந்து வாழுதல்<br>முன்னேற தடை<br>கருத்துக்களை முன்வைக்க முடியாமை<br>திறமையை வெளிக் கொணராமை<br>பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகுதல்<br>உடல் உள பாதிப்பு<br>வெக்கப்படுதல்<br>ஓதுக்கப்படுதல்<br>வேலைக்கான ஊதியமின்மை<br>பாதுகாப்பின்மை<br>போகப் பொருளாக பார்த்தல்<br>வேறுபாடான விமர்சனம்<br>மறுமணம் புரியாமை<br>சுயமாக முடிவெடுக்காமை |
| 8 | கலாச்சாரம் | பெண்களுக்கென சில சாஸ்திரம் சம்பிரதாயங்களை கடைப்பிடித்தல்.<br><br>ஆண்களுக்கு எந்த வித தடையும் விதிக்காமை. | பெண்களின் உணர்விற்கு மதிப்பு அளிக்கபடாமை.<br><br>பெண்கள் மறுமணம் செய்யத்தடை. |

**பெண்ணியம்:**

பெண்களின் கண்கள் வழியாக உலகத்தை பார்ப்பதே பெண்ணியம் எனப்படும். நான்கு வகையான பெண்ணியம் உள்ளது. அவை

1. தாராளவாத பெண்ணியம்
2. தீவிரவாத பெண்ணியம்
3. மிதவாத பெண்ணியம்
4. சமூகவாத பெண்ணியம்

**தாராளவாத பெண்ணியம்:**

வாய்ப்புகள் சமமாக அளிக்கப்பட வேண்டும் என்பதே தாராளவாத பெண்ணியத்தின் நோக்கமாக இருந்தது. வேலை, மகப்பேறு உரிமை, சமூக பாதுகாப்பு உரிமை, குழந்தை பராமரிப்பு, பாகுபடுத்தப்படாத கல்வி, வறுமை, பயிற்சி, உடலை கட்டுப்படுத்தும் தன்மை பெண்களுக்கு தேவை என்ற கருத்தையும் தாரளவாத பெண்ணியம் கூறியுள்ளது.

**தீவிரவாத பெண்ணியம்:**

இரண்டாம் தர பாலினத்தவர் என்ற பார்வையை ஒடுக்க வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும். பெண்களை ஒடுக்கும் முறைகளான திருமணம், தாய்மை, காதல், உடல் போன்றவற்றை வெறுத்தனர்.

**மிதவாத பெண்ணியம்:**

பெண்களின் உழைப்பு எவ்வாறு சுரண்டப்படுகிறது. தனி சொத்துடைமை இவற்றை பற்றி மிதவாத பெண்ணியம் கூறியுள்ளது.

**சமூகவாத பெண்ணியம்:**

முதலாளித்துவத்திற்கு எதிரான ஒன்றாகும். பெண்களின் உழைப்பு எவ்வாறு சுரண்டப்படுகிறது என்பது பற்றியும் கூறியுள்ளது. மேலும் தாராளவாத பெண்ணியம் மற்றும் தீவிரவாத பெண்ணியம் இணைந்ததே சமூகவாத பெண்ணியமாகும். பெண்ணியத்தை தொடர்ந்து பெண்கள் இயக்கங்களின் வரலாறு குறித்து விளக்கப்பட்டது.

**முதல் அலை:**

1972 -ல் படித்த பெண்கள் ஒன்றிணைந்து கல்வி மற்றும் வேலைகளில் சமவாய்ப்பு வேண்டும் என்ற குரல் எழுப்பினர். எழுத்தாளர்கள் என்று எடுத்துக் கொண்டால் பெரும்பாலும் ஆண்களே இருந்தனர். ஆகையால் பெண்கள் எல்லாம் ஒன்றிணைந்து தமது வாழ்க்கை வரலாற்றை எழுத்து மூலமாக பதிவு செய்ய முயற்சிகள் எடுத்தனர்.

**இரண்டாம் அலை:**

19ஆம் நூற்றாண்டில் பாராளுமன்ற ஜனநாயகம் உருவாக்கப்பட்டு மைய அரசு பகிர்ந்து அளிக்கப்பட்டது. அரசு, உச்சநீதிமன்றம், அரசியல் சாசனம் இணைந்து வயது வந்த ஆண்களுக்கான ஓட்டுரிமையை அதிகப்படுத்தினர். பெண்களுக்கும் ஓட்டுரிமை வேண்டும் என்று நியூசிலாந்து, ஆஸ்திரேலியன் காலனி பெண் இயக்கங்கள் கேள்வி எழுப்பினர். இதன் பிறகு 1914 -1939 ஆம் ஆண்டில் 28 நாடுகள் பெண்களுக்கான ஓட்டுரிமையை வழங்கினர்.

**மூன்றாம் அலை:**

1974ஆம் ஆண்டுதான் ஸ்விட்சர்லாந்து பெண்களுக்கான ஓட்டுரிமையை வழங்கியது. மூன்றாம் அலை ரஷ்யாவில் தொடங்கப்பட்டது. இவற்றின் நோக்கம் பெண்களின் வீட்டு வேலைச்சுமையை குறைக்கவும், கல்வி மற்றும் வேலையில் சமவாய்ப்பு பெறுவதாக இருந்தது. இவ்வாறாக ஆணாதிக்கம், பெண்ணியம் மற்றும் பெண்கள் இயக்கங்கள் குறித்து மிக சுருக்கமாகவும் தெளிவாக பயிற்றுநர் பங்கேற்பாளர்களுக்கு விளக்கினார்.

## பட்டிமன்றம்

### தலைப்பு: ஆணாதிக்கம் நிலைத்து நிற்க காரணம் ஆண்களா? பெண்களா?

பயிற்சியின் முடிவில் பங்கேற்பாளர்கள் இரு குழுக்களாக பிரிக்கப்பட்டனர். அதன் பின்னர் ஆணாதிக்கம் நிலைத்து நிற்க காரணம் ஆண்களா? பெண்களா? என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடத்தினர். முதல் அணியினர் ஆணாதிக்கத்திற்கு காரணம் ஆண்களே என்றும், இரண்டாம் அணியினர் ஆணாதிக்கத்திற்க காரணம் பெண்களே என்றும் வாதிட்டனர். அவற்றின் சராம்சம் பின்வருமாறு

**முதல் அணி: ஆண்களே காரணம்**

பெண்களை வெளியில் செல்லவிடாமல் தடைகளை அமைத்து, வீட்டிலும், சமூகத்திலும் எங்கள் அதிகாரத்தை பயன்படுத்தி அடக்கி வைக்கும் திறமை உரிமை ஆண்களிடமே உள்ளது. ஆகையால் ஆண் ஆதிக்கத்திற்க்கு காரணம் ஆண்களே.

பெண்கள் உடல் மெலிவாகதான் இருக்கவேண்டும் என்ற பாலின பாத்திரம் சமூகத்தில் உள்ளது. ஆண்கள் பலம் மிக்கவராக இருக்கவேண்டும் என்றும் கூறுகிறது இச்சமூகம். இதன் அடிப்படையில் உணவில் பாகுபாடு ஏற்படுகிறது. இப்படி ஆண்களுக்கு சாதகமாக பாலின பாத்திரங்களை தொடர்ந்து சமூகத்தில் எடுத்து வருவது ஆண்கள்தான். குடும்பத்தில் முடிவுகள் கூட ஆண்கள் தான் எடுக்கின்றனர்.வன்முறையை செலுத்தும் நிலையில் ஈடுபடுவது ஆண்கள்தான் ஆண்களின் ஆதிக்கம் தான் பெண்ணை அடிமைப்படுத்துகின்றன. ஏன் ஒரு பெண்ணின் உடலிலும் கூட ஆண் ஆதிக்கம் செயல்படுத்தப்படுகிறது. ஆகையால் ஆண் ஆதிக்கத்திற்க்கு காரணம் ஆண்களே.

**இரண்டாம் அணி: பெண்களே காரணம்**

சுதந்திரம் அடைத்து 63 வருடங்கள் ஆகியும், தற்பொழுது உள்ள பெண்கள் நிலைகள் என்று பார்த்தால் 7 வருடங்களாக சுயஉதவிக்குழு நடத்தி வருகிறேன் பெண்கள் வங்கிக்கு செல்வதற்கு கூட வெளியே வருவதில்லை. காரணம் என்று பார்த்தால் செவ்வாய், வெள்ளி, அமாவாசை, கிருத்திகை என நாட்களுக்கு சாக்குபோக்கு சொல்லியும், 6 மணி ஆனால் விளக்கு போட வேண்டும் என்றும் மதியம் 12 மணி ஆனால் உணவு சமைக்க வேண்டும் என்றும் கூறுவர். எந்த ஒரு விழிப்புணர்வு பயிற்சிகளுக்கும், கூட்டத்திற்கும் வருவதில்லை. அப்படியே வந்தாலும் 10 நிமிடத்திற்க்கு மேல் இருப்பது கிடையாது. ஆகையால் ஆணாத்திக்கம் வளர பெண்கள் ஒரு முக்கிய காரணமாக உள்ளனர். ஆணாதிக்கத்திற்க்கு காரணம் பெண்களே?

செல்போன் கணவர்தான் வாங்கித்தருவார் அவர் மட்டும் தான்பேசுவார் வெளியூரிலிருந்து வரும் போது இன்ன சமையல் செய்து வைக்க வேண்டும் என்றெல்லாம் கூறுவர். ஆனால் திடீரென குழந்தைக்கு உடல்நிலை சரியில்லை என்றால் நலம் விசாரிக்க கணவனின் செல்போனுக்கு காது இருக்காது. இப்பொழுது எல்லாம் கிராமப்புறங்களிலும் பெண்பார்த்த உடனேயே மணமகன் செல்போன் வாங்கி கொடுத்து விடுகின்றனர். மணமகனே செல்போனிற்கு காசு ஏற்றிவிட்டு பேசுவார். இதன் நோக்கம் அந்த பெண் எங்கு போகிறாள் எங்கு இருக்கிறாள் என்று அறிந்து கொள்வதற்குதான். இது போன்ற சிந்தனையை வளர்ப்பது பெண்களே.

இவ்வாறு இரண்டு அணியினரும் வாதம் செய்தனர். பின்னர் இறுதியில் அதிக கருத்துக்களை முன்வைத்த இரண்டாவது அணி வெற்றி பெற்றது. ஆணாதிக்க சிந்தனை நிலைத்து நிற்பதற்கு காரணம் பெண்களே என்று அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இந்த அமர்விற்கு பின் மாலை மீனா என்ற ஆவணப்படம் காட்டப்பட்டது. அப்படத்தில் வந்த காட்சிகள் பாலியல் பாகுபாடு, பெண்கள் மீதான வன்முறையினை எடுத்துக்காட்டுவதுடன், பாலியல் சமத்துவத்தை வலியுறுத்துவதாகவும் அமைந்திருந்தது.

# பாலியல் மற்றும் ஆண்தன்மை

## திருமிகு.பிம்லா சந்திரசேகா்

பாலியல் மற்றும் ஆண்தன்மை பற்றிய பயிற்சி திருமிகு.பிம்லா சந்திரசேகா் அவா்களால் பயிற்றுவிக்கப்பட்டது. முதல் நாள் நடந்த பயிற்சி பற்றிய கருத்துக்களை இணைத்து எழுத வேண்டும் என்று எடுத்துரைக்கப்பட்டது. அதனை தொடா்ந்து பெண்களுக்காக போராடிய னுச.முயவவந லுழரனெ, டாக்டா்.முத்துலெட்சுமி ரெட்டி (ம) மாா்டின் லுதா்கிங் பற்றி அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டது. மேலும் சிப்கோ இயக்கம், அபிகோ இயக்கம் பற்றி எடுத்துரைக்கப்பட்டது. இதில் மரத்தை வெட்டக்கூடாது என்று பெண்கள் ஒன்றுக் கூடி மரத்தை கட்டிப்பிடித்து முதலில் எங்களை வெட்டிய பிறகு மரத்தினை வெட்டுங்கள் என்று போராடினா். அதேபோல் மணிப்பூரில் இராணுவத்தை எதிா்த்து 16 பெண்கள் நிா்வாணமாக போராடிய நிகழ்வும் எடுத்துக்காட்டாக கூறப்பட்டது. பின்னா் இரோம் ஷா்மிளா அவா்கள் பற்றியும் மணிப்பூா் மாநிலத்தில் நடைமுறையிலுள்ள யுகுளீயு-(யுசஅநன குழசஉநள ளுிநஉயைட ீழறநச யுஉவ) பற்றியும், சாராய எதிா்ப்பு போராட்டம் பற்றியும் ஜப்பானில் ஹிரோசிமா நாகசாகி பாதிப்புகள் பற்றியும் கருத்துக்கள் எடுத்துரைக்கப்பட்டது.

அதன்பின் பால் பாலியல் வேறுபாடுகள் பற்றிய கருத்துக்கள் கேட்கப்பட்டது. கரோலின் மோசா் என்ற பெண்ணியவாதியின் கருத்துப்படி நான்குவிதமான பாலியல் பங்குகளான உற்பத்தி, மறுஉற்பத்தி, சமூக நிா்வாகம் மற்றும் சமூக அரசியல் பற்றியும் விளக்கி கூறப்பட்டது.

**ீசயஉவைஉயட புநனெநச நேநனள (அடிப்படை பாலின தேவை)**

அடிப்படை பாலின தேவைகளில் பெண்களின் அடிப்படை தேவைகளான நீா், வீட்டிற்கு தேவையான பொருட்கள், இருப்பிடம், உணவு போன்றவை அடங்கும்.

**ளுவசயவநபஉை புநனெநச நேநனள**

சமத்துவம், சம ஊதியம், சமஅளவு அல்லது சம மதிப்பு (நுஙரயட ஏயடரந) பாலியல் தொந்தரவுகளிலிருந்து விடுதலை, முதல் உரிமை, குழந்தை வளா்ப்பில் ஆண், பெண் பாகுபாடின்மை போன்றவை அடங்கும். அடிப்படை பாலினத்தேவைகளில் தற்பொழுது பெண்களுக்கு சுலபமாக வேலை செய்வதற்கு மாற்றுப்பொருட்கள் வந்துள்ளன. (மிக்ஸி, கிரைண்டா்) போன்றவை ஆனால் அந்த வேலைகள் மறுபடியும் பெண்ணாலே செய்யப்பட்டு வருகிறது. வேலை பகிா்வில் மாற்றம் வரவில்லை. இதுபோன்ற விஷயங்களில் மாற்றம் கொண்டு வந்தால் தான் சமூகத்தில் மாற்றம் கொண்டு வரமுடியும் என்று எடுத்துரைக்கப்பட்டது.

உண்மையான ஆணாக இருந்தால் ஆண், பெண் சமத்துவத்திற்கு பயப்படமாட்டான் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. மேலும் பெண்களை பாதுகாக்க உதவும் சட்டம் பற்றியும் பேசப்பட்டது. 1980 - 83களில் வரதட்சணை தடுப்புச்சட்டம் நடைமுறைக்கு வந்தது. குடும்ப வன்முறை தடுப்பு சட்டத்தில் இருபிரிவுகள் உள்ளன 1) சிவில் சட்டம் 2) கிரிமினல் சட்டம். சிவில் சட்டத்தில் நஷ்ட ஈடுகள் மட்டுமே உண்டு. ஆனால் கிரிமினல் சட்டத்தில் நஷ்ட ஈடுகள் மற்றும் தண்டனையும் வழங்கப்படும். மேலும் சிவில் சட்டத்தில் பதியப்பட்ட வழக்குகள் கிரிமினல் சட்டமாக மாற வாய்ப்புகளும் உள்ளது. இதோடு மட்டுமல்லாமல், இந்திய அரசியல் சட்டத்தில் உள்ள ளுநஉ -498(யு)வையும் பயன்படுத்தலாம். ளுநஉ 498 (யு) என்பது பெண்கள் காவல் நிலையத்திற்குச் சென்று தனக்கு நடந்த கொடுமை பற்றி பதிவு செய்தால், உடனடியாக எதிராளியின் மேல் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் தண்டணைகளும் வழங்கப்படும். ஆகையால் இவ்விரண்டு சட்டமும் ஆண்களுக்கெதிரான சட்டங்களாக உள்ளது என்ற கருத்து சமூகத்தில் நிலவி வருகிறது. ஏனென்றால் சில பெண்கள் இவ்விரண்டு சட்டத்தை தவறான முறையில் பயன்படுத்தி வருகின்றனா் என்றும் கூறப்பட்டது.

பெண்கள் மீதான வன்முறையும் மனித உரிமை மீறலே என்று 1993-ல் பெய்ஜிங்கில் நடந்த வியட்நாம் மாநாட்டில் கூறப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது என்ற தகவல்களும் எடுத்துரைக்கப்பட்டது.

1975ல் இரண்டாம் உலக பெண்கள் மாநாடு, 1985 ல் மூன்றால் உலக பெண்கள் மாநாடு, 1995ல் நான்காம் உலக பெண்கள் மாநாடு என்று உலக பெண்கள் மாநாடுகள் பற்றி கூறப்பட்டது.

இதன் பின்னர் ஆணாதிக்கம் பற்றி எடுத்துரைக்கப்பட்டது. ஒரு பெண்ணின் உடல், உழைப்பு, சிந்தனை, பாலியல், குழந்தையின்மை, பாலின தேர்வு ஆகியவற்றில் ஆணை மையப்படுத்தும் கருத்தியல் ஆணாத்திக்கம் எனப்படுகிறது. பெண்கள் மீதான கட்டுபாடுகள் இயங்கும் நிறுவனங்களாக குடும்பம், சமூகம், சட்டம் என்று கூறப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இரண்டு குழுக்களாக பங்கேற்பாளர்கள் பிரிக்கப்பட்டு, அம்மா என்றால் நினைவிற்கு வருவன என்ன? அப்பா என்றால் நினைவிற்கு வருவன யாவை? என்ற கேள்வி பயிற்சியாளரால் கேட்கப்பட்டது. இந்த கேள்விக்கான பதில்கள் குழுவிவாதத்தின் மூலம் பதிவு செய்யப்பட்டன. பதிவு செய்யப்பட்ட கருத்துக்கள் பின்வருமாறு:

| அம்மா | அப்பா |
|---|---|
| அன்பு | குடும்பத்தலைவர் |
| குடும்ப விளக்கு | புலமானவர் |
| தெய்வபக்திஉள்ளவர் | ஆண்மகன் |
| பெற்றதாய் | வீரமானவர் |
| குழந்தை பெறுபவர் | கண்டிப்பானவர் |
| அனைவரையும் அனுசரிப்பவர் | பொறுப்பானவர் |
| வீட்டை ஓழுங்கு செய்பவர் | பாகுபாடுபார்பவர் |
| நேரத்திற்க்கு சமைப்பவர் | சிந்தனையாளர் |
| சிக்கனமானவர் | அரசியலில் இருப்பவர் |
| சேமிப்பவர் | உழைப்பாளி |
| கலாச்சாரம் காட்டுபவர் | பயம் |
| சம்பளமில்லா உழைப்பாளி | அன்பானவர் |
| புத்திசாலி | பாதுகாப்பவர் |
| வீரத்தாய் | வழிகாட்டி |
| விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை | வாகனம் ஓட்டுபவர் |
| பாட்டுப்பாடுபவர் | |
| பணிவு மரியாதை தருபவர் | |
| சமூக அக்கறை உள்ளவர் | |
| கண்டிப்பானவர் | |

**பாலியல் பிரிவினைகள்:**

பெண் குழந்தைகள் பிறந்தால் வருந்துவதும், ஆண் குழந்தைகள் பிறந்தால் மகிழ்வதும், ஆண் பிள்ளைகளை வீட்டு வேலைகள் செய்ய அனுமதிக்கப்படாமை, ஆணிற்கு மட்டும் முடிவெடுக்கும் அதிகாரம் கொடுத்து வளர்ப்பது, ஆண் குழந்தைக்கு மட்டும் இடம் பெயர்வுக்கான சுதந்திரத்தை அளிப்பது, ஆண் குழந்தை செய்த தவறுகளை தண்டனை அளிக்காமல் மன்னித்து ஏற்றுக்கொள்வது,

சிறுவயதில் இருந்து ஆணிற்கு தன்னம்பிக்கை ஊட்டி வளர்ப்பது, பெண்ணை வெளியிடங்களுக்கு அனுப்பாமலும் அப்படி அனுப்பினால் தம்பியுடன் அனுப்பி பெண்ணை பலவீனப்படுத்துவது, பொதுவாக பள்ளிகளிலும் வீடுகளிலும் சமூகத்திலும் தவறு செய்தால் ஆண்பிள்ளையை அடிப்பதும், பெண் பிள்ளையை திட்டும் பழக்கமும் நடைமுறையில் உள்ளது. ஆண் வன்முறையாளனாக மாற இதுவும் ஒரு காரணம் என்ற கருத்து முன் வைக்கப்பட்டது, இதன் பின்னர் இன்றைய சூழலில் ஆண், பெண் வேலைபாகுபாட்டிற்கான சதவீதம் போடச்சொல்லி பாரம் கொடுக்கப்பட்டது. 4 குழுக்களாக பிரிந்து குழுவிவாதம் மூலம் பூர்த்தி செய்யப்பட்டு கருத்துகள் பின்வருமாறு

| வேலைகள் | பங்களிப்பு பெண் | பங்களிப்பு ஆண் |
|---|---|---|
| மறு உற்பத்தி | 90மூ | 10மூ |
| உற்பத்தி | 40மூ | 60மூ |
| சமூகம் | 10மூ | 90மூ |
| சமூக அரசியல் | 10மூ | 90மூ |

**ஆண்நிலை:**

சமுதாயத்தில் ஆணையும் பெண்ணையும் ஒப்பிட்டு பார்க்க வேண்டும். ஆணுக்கென்று சில வரையறைகளை வகுத்துள்ளது. எதற்கும் அழக்கூடாது. பயப்பட கூடாது. வன்முறையில் ஈடுபடவேண்டும் என்றெல்லாம் உள்ளது. ஒரு ஆண் ஆணாக இருப்பதற்கு சமூகம் அழுத்தம் தந்து கொண்டே உள்ளது. இதுவே ஆண்நிலை எனப்படும். ஆண்நிலையை ஐந்து வகையாக பிரிக்கலாம்.

### Rigidity of Masculanities:-

ஆண் பெண் சமத்துவத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. ஆண்மட்டுமே வேலைக்கு செல்ல வேண்டும் என்ற எண்ணம், பெண்கள் எடுக்கும் முடிவுகளை ஏற்றக்கொள்ள இயலாமை.ஒரு ஆணின் அனுமதி பெற்ற பிறகுதான் செயல்களில் ஈடுபடவேண்டும் என்ற எண்ணம். இது போன்ற நிலைகள் கட்டுக்கோப்பு ஆண்நிலை எனப்படும்.

### Insecurity of Masculinities:-

ஆணைக்காட்டிலும் பெண் அதிக நிலையில் படித்திருக்கும் போது பயம் உணர்வு ஏற்படுதல் சந்தேகப்படுதல், வன்முறையில் ஈடுபடல்.

### Coercion of Masculanities:-

ஆண் தன்மையை திணித்தல் உதாரணமாக: உடலுறவு தேவைப்படும் போது மனைவியின் உணர்ச்சிகளை பொருட்படுத்தாது கட்டாய உடலுறவு கொள்ளுதல்.

### Burdurm of Masculanities:-

பொருளாதார ரீதியான தேவைகள் மற்றம் பொறுப்புகள் குடும்பத்தில் ஆண்களே ஏற்று நடத்த வேண்டும் என்று சமூகம் கட்டாயப்படுத்துகிறது. இவ்வாறு அதிகாரங்கள் கூடும்பொழுது வன்முறையும் அதிகரிக்கிறது.

### Pressure of Masuclanities:-

வன்முறையாளனாக இருக்க வேண்டும் பயப்படக் கூடாது, அழக்கூடாது, பொறுப்புகள் ஏற்று நடக்க வேண்டும், ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்று ஆண்களுக்கு இச்சமூகம் அழுத்தம் கொடுத்துக் கொண்டே உள்ளது என்று கூறப்பட்டது.

பின்னர் வன்முறை என்பது பிரச்சனையா? தீர்வா? என்று வினா எழுந்தது. அதற்கு அனைவரும் வன்முறை என்பது பிரச்சனைதான் என்று கூறினர். ஆதிகாரம் ஒருவர் மேல் திணிக்கப்படும் போது தான் வன்முறையாக மாறுகிறது என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. இறுதியாக சர்வதேச அளவில் ஆண்நிலை எவ்வாறு இருக்கின்றது என பார்க்கும் போது உத்திரபிரதேச மாநிலத்தில் லக்னோ என்ற இடத்தில் வன்முறையை எதிர்த்து ஆண்களும் பெண்களும் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டார்கள். Men Against Gender Equality இப்போராட்டத்தில் கல்லூரி பேராசிரியர்கள், மாணவர்கள், பத்திரிக்கையாளர்களும் கலந்து கொண்டு இருந்தார்கள். இந்த நிகழ்வு குறும்படமாக ஒளிப்பரப்பபட்டது.

# வளர்ச்சி மேம்பாட்டு போக்குகள், வறுமை மற்றும் பாலியலில் ஏற்படுத்தி வரும் தாக்கங்கள்

## திருமிகு.கேப்ரியலே

திருமிகு.கேப்ரியலே அவர்களால் வளர்ச்சி மேம்பாட்டு போக்குகள், வறுமை மற்றும் பாலியலில் ஏற்படுத்தி வரும் தாக்கங்கள் பற்றி பயிற்றுவிக்கப்பட்டது. முதலில் பங்கேற்பாளர்களை இரண்டு குழுவாக பிரித்தனர். அதன் பின்னர் நிலம், நீர் எவ்வாறு சமீபத்திய வளர்ச்சி மேம்பாட்டால் பாதிக்கப்பட்டு உள்ளது என்று பங்கேற்பாளர்களிடையே கேள்வி எழுப்பப்பட்டது. குழுவிவாதத்தில் பதிவு செய்யப்பட்ட கருத்துகள் பின்வருமாறு:

**குழு-1 (தமிழ்நாடு)**

**நிலம்:**

விளை நிலங்கள் மனைகளாக மாற்றப்பட்டுள்ளது(கோவில்கள், அனல் மின்நிலையம், அணுமின் நிலையம் கட்டப்படுகிறது), நிலமோசடி நடைபெற்று வருகிறது; குறிப்பாக ஏழை மக்களிடமிருந்து நிலங்களை அபகரிக்கப்படுகிறது, விளைநிலங்கள் சுற்றுலாதளம் மற்றும் தொழிற்சாலைகளாக மாறுகிறது, நிலங்கள் மாசுபடுகிறது, விவசாயம் பாதிக்கப்படுகிறது.

**நீர்:**

மணல் எடுப்பதால் நீர் வளம் குறைகிறது, குடிநீர் பற்றாக்குறை ஏற்படுகிறது. (வளர்ச்சி திட்டங்களால்) குளம் குட்டைகளில் கழிவுநீர் கலக்கிறது, (சாக்கடைகள், சாயபட்டறை கழிவு மற்றும் தொழிற்சாலை கழிவுகள் மூலம் நீர் மாசுப்படுகிறது), தனிநபர் வருமானத்திற்க்காக நீர் சுரண்டப்படுகிறது (நீரிலிருந்து மின்சாரம் தயாரிப்பு, நீர்வளம் குறைகிறது, காடுகள் அழிக்கப்படுவதால் மழை பொழிவதில்லை நிலத்தடி நீர் குறைகிறது.

**குழு – 2 (இலங்கை)**

**நிலம்:**

தனியார் நிலங்கள் அபகரிப்பு, இயற்கை வளங்கள் பாதிப்பு, கண்ணிவெடி புதைப்பு, யுத்ததினால் நிலங்கள் அழிக்கப்பட்ட நிலை, இரசாயனத்தால் நோய் தாக்கம், உணவகம் மற்றும் அலைகட்றை (Cell Phone Towers) அமைக்க நிலம் அபகரிப்பு.

**நீர்:**

இரசாயன பாவனை, காடுகள் அழிப்பால் நிலத்தடி நீர்பாதிப்பு மற்றும் குடிநீர் இன்மை, பல இடங்களில் குடிநீர் உவர்நீராக மாறியுள்ளது.

பின்னர் பயிற்சியாளர் அவர்களால் சமீபத்திய வளர்ச்சி மேம்பாட்டு போக்குகள், வறுமை மற்றும் பாலியல் ஏற்படுத்தி வரும் தாக்கங்கள் பற்றி பின்வருமாறு தெளிவுபடுத்தினர்.

- வீதிபுனரமைப்பு
- குடியேற்றங்கள்
- சுற்றுலாத்துறை
- வர்த்தகமயமாக்கம்
- தொழில்நுட்ப வளர்ச்சி

**வீதி புனரமைப்பு:—**

தற்பொழுது வீதி புனரமைப்பு பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. ரோடுகள், நான்கு வழிசாலைகள், மேம்பாலங்கள் என்று வளர்ச்சி என்ற பெயரில் கட்டப்பட்டு வருகிறது. இதன் மூலம் பாதிப்பு

மக்களுக்கே ஏற்படுகிறது. தேசிய நெடுஞ்சாலைகள் போடுவதற்காக மக்களின் குடியிருப்புகள் அகிரமிக்கப்படுகிறது. இதனால் மக்கள் தங்கள் வாழ்விடங்களை விட்டு தாழ்வான பகுதியில் குடியேற்றப்படுகின்றனர். இதனால் மழைக்காலங்களில் வெள்ளம் ஏற்பட்டு தண்ணீர் வெளியேற முடியாமல், குடியிருப்பு பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்து பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்ற கருத்து பதிவு செய்யப்பட்டது.

**குடியேற்றங்கள்:—**

குடியேற்றங்கள் என்று எடுத்துக்கொண்டால், சில சமூக விரோதிகளால் அரசின் புறம்போக்கு நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு வீடுகளாக மாற்றி வருகின்றனர். மேலும் சுனாமியில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக வீடுகள் வழங்குவதன் பெயரில் அவர்களுக்கு புதிய குடியேற்றங்கள் அமைப்பதன் மூலம் பல நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுகின்றன. ஆகையால் சொந்த ஊரிலே மக்கள் அகதிகளாக வாழும் நிலை ஏற்பட்டுள்ளது.

**சுற்றுலாத்துறை:—**

சுற்றுலாதுறையின் மூலம் நிலங்களும், குடிநீரும் பெருமளவு மாசுபடுகின்றன. பிற்காலத்தில் மூன்றாம் உலகப்போர் நீரினால் வரும் வாய்ப்புகள் அதிகம் என்ற கருத்தும் முன் வைக்கப்பட்டது. மேலும் சுற்றுலாத்துறையின் மூலம் பெண்களின் உடல் மற்றும் உழைப்பு சுரடண்டப்படுகிறது.

**வர்த்தகமயமாக்கம்:—**

வர்த்தக மயமாக்கம் என்ற பெயரில் விவசாயத்தில் தாக்குதல் நடைபெற்று வருகிறது. பணவளர்ச்சி உயர்ந்து வயிறு வளர்ச்சி குறைகிறது. சொந்த விதைகள் என்று இருந்த நிலை மாறி வெளிநாட்டு விதைகளை இறக்குமதி செய்து பயன்படுத்தும் நிலை உருவாகியுள்ளது. வெளிநாட்டு விதைகளில் ரசாயனம் அதிகம் சேர்க்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் நிலம் மாசுபடுவதோடு மக்களின் உடல் நலனும் பாதிப்படைகிறது.

**தொழில்நுட்ப வளர்ச்சி:—**

தொழிற்சாலைகள் உருவாக்கமே தொழில்நுட்ப வளர்ச்சிக்கு காரணம். ஆனால் இந்த தொழிற்சாலைகள் மூலம் வெளியேற்றப்படும் கழிவு நீரினாலும் புகையினாலும் குடிநீர் மாசுபடுவதுடன் காற்று, நிலம் மற்றும் மனிதனின் உடல்நலத்திலும் பாதிப்புகள் உண்டாக்குகின்றன. பருவ கால மாற்றத்திற்கு ஒரு முக்கிய காரணமாக தொழில்நுட்ப வளர்ச்சி உள்ளது.

இதை தவிர பொருளாதாரம், சமூகம் என்று எடுத்துக்கொண்டால் ஏற்றத்தாழ்வுகள், ஆணாத்திக்கம், சாதி மோதல்கள், மொழி கலவரங்கள், நாடு, மதம் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் தான் அதிகம் வளர்ந்துள்ளனர் என்றும் கூறப்பட்டது.

இச்சூழலில் ஆண் பெண் சமத்துவம் இல்லாத நமது சமுதாயத்தில் பெண்களின் நிலை மிக கவலைக்குரிய ஒரு விஷயமாக உள்ளது. தண்ணீர் பற்றாக்குறை, இடப்பெயர்ச்சி, வறுமை மற்றும் பாலியல் ரீதியான சுரண்டல் ஆகிய பிரச்சனைகளிலிருந்து பெண்களை பாதுகாக்கும் வகையில் திட்டங்கள் உருவாக்குவதற்கு நாம் இணைந்து செயல்பட வேண்டும் என்ற கருத்துடன் இவ்வமர்வை பயிற்சியாளர் நிறைவு செய்தார்.

# வளர்ச்சி மேம்பாட்டு போக்குகள், வறுமை மற்றம் பாலியலில் ஏற்படுத்தி வரும் தாக்கங்களுக்கு தேவையான மாற்றுக் கொள்கைகள்

## திருமிகு.காந்திமதி

சமீபத்திய சூழலில் வளர்ச்சி மேம்பாட்டு போக்குகள், வறுமை மற்றும் பாலியலில் ஏற்படுத்தி வரும் தாக்கங்களுக்கு எது தீர்வாக அமையும் என்று பயிற்சியாளரால் கேள்வி எழுப்பபட்டது. இதை விவாதிக்க பங்கேற்பாளர்கள் குழுக்களாக பிரிந்தனர். இக்குழுவிவாதத்தின் சராம்சம் பின்வருமாறு:

**ஒரு நாட்டின் முன்னேற்றம் என்பது:**

**சமூகம்:**

பெண்களின் தற்கொலை எண்ணிக்கை குறைக்க வேண்டும்
பெண்களுக்கான சட்டங்கள் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படவேண்டும்
மறு உற்பத்தியில் ஆண்களின் பங்களிப்பை அதிகப்படுத்த வேண்டும்
மகப்பேறு கால இறப்பை குறைக்க வேண்டும்
பாலின விகிதத்தில் நிலையான அளவிற்கு மாற்றும் காண வேண்டும்
சமூகத்தில் பாதுகாப்பை அதிகப்படுத்த வேண்டும்

**அரசியல்:**

50% பெண்கள் பங்கேற்பு
முடிவு எடுக்கும் அதிகார நிலைக்கு பெண்கள் பங்கேற்பை அதிகப்படுத்துதல்

**பொருளாதாரம்:**

சம ஊதியம்
சம வேலைவாய்ப்பு
பொது / குடும்ப வாழ்க்கையில் சமஉரிமை
கல்வியில் — சிறப்பு ஊக்குவிப்பு திட்டம்
GDP –ல் பெண்களின் பங்கு கணக்கீடு (பெண்களின் வேலைகளும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவேண்டும்)

**கலாச்சாரம்:**

பெண் சிசு கொலை குறைய வேண்டும்
பெண்கள் பொது நிகழ்வுகள், தீர்மானங்களில் பங்கேற்பதை அதிகப்படுத்த வேண்டும்
பெண்களின் மீதான குற்றங்கள் குறைய வேண்டும்
சுரண்டல் தொழில்கள் அகற்றபட வேண்டும்
எளியமுறை திருமணத்தை ஊக்குவிக்க வேண்டும்.

**ஒரு நாட்டின் முன்னேற்ற என்பது சமூக கலாச்சார, பொருளாதார அரசியலில் காணப்படும் வளர்ச்சிதான் என்ற கருத்து வெளிப்பட்டது.**

**நாட்டின் முன்னேற்றத்தை அளவிட உதவும் கருவிகள்:**

கல்வி, தனிநபர் வருமானம், சிசு மரணம், கருக்கொலை, பிறப்பு விகிதம், இறப்பு விகிதம், அரசியல் பங்கேற்பு, சமமான வேலைவாய்ப்பு, சமகூலி என்ற GDG, HDI –யும் இதில் அடங்கும் என்று பயிற்சியாளர் கூறி விளக்கினார்.

## Gender Development Indicator (GDI):-

நீண்ட ஆரோக்கியமான வாழ்வு, அறிவத்திறன், பெண்களின் சமூகமான நிலை, அரசியல் பங்கேற்பு, பொருளாதார பங்கேற்பு, முடிவு எடுக்கும் திறமை, வளங்களை பயன்படுத்துதல்.

## Indicator MDI –:-

வாழ்நாள் விகிதம், கல்வி அறிவு, தேவையை பூர்த்தி செய்யும் வருமானம் இவற்றைக் கொண்டு கணக்கிடப்படுகிறது.

**ஆண்டாயிரத்து வளர்ச்சி இலக்குகள்(Milienium Development Goal ):–**

வறுமையும் பசிப்பிணியும் வேரறுத்தல்

உலக அளவில் ஆரம்ப கல்வியை எட்டுதல்

பெண்களை ஆற்றல்படுத்தி, பாலின சமத்துவத்தை மேம்படுத்துதல்

குழந்தைகள் இறப்பை குறைத்தல்

மகப்பேறு நலத்தை மேம்படுத்துதல்

HIV / AIDS, மலேரியா மற்றும் உயிர் கொல்லி நோய்களை தடுத்தல்

நிலைத்த சுற்றுப்புறச்சூழலை உறுதி செய்தல்

உலகளாவிய பங்கேற்பின் மூலம் மேம்பாடு காணுதல்.

இதை தவிர பெண்களுக்கெதிரான வன்முறையை குறைத்தல், சொத்துரிமை, அரசியல் அமைப்பு சட்ட மேம்பாடு, வேலைவாய்ப்பு போன்றவையும் வளர்ச்சிகான காரணியாக செயல்படுகிறது. இதன் தொடர்ச்சியாக பங்கேற்பாளர்கள் 3 குழுக்களாக பிரிந்து, பெண்கள் முன்னேற்றம் அடைய தேவைப்படும் வழிமுறைகள் குறித்து குழுவிவாதம் செய்தனர். இதன் மூலம் வெளிவந்த கருத்துக்கள் பின்வருமாறு

**பெண்களை வலுப்படுத்தல் (குழு -1):**

- மகப்பேறு இறப்பை குறைத்தல்
- பாலின விகிதத்தில் பெண்களின் எண்ணிக்கையை உயர்த்துதல்
- பாலியல் தொழிலில் ஈடுபடும் பெண்கள் எண்ணிக்கையை குறைத்தல்
- HIV பாதிக்கப்பட்ட பெண்களுக்கு மறுவாழ்வு
- சுய உதவி குழுக்களை அதிகரித்தல்
- பெண் சிசு, பெண்கருக்கொலை குறைத்தல், தடுப்பதற்கான விழிப்புணர்வு திட்டங்களை மேம்படுத்துதல்
- பெண்களின் வன்முறைகளை குறைப்பதற்கான சட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்துதல்
- பெண்கள் அரசியலில் பங்கேற்று பெண்களுக்கான உரிமைகளை பெற்றுக்கொடுத்தல்
- வரவு செலவு திட்டத்தில் பெண்கள் வேலைதிட்டங்களுக்கென நிதி அதிகரித்தல்
- பெண்களின் உயர் கல்விக்கான உதவி தொகையை ஊக்குவித்தல்

**பெண்கள் வலுப்படுத்துதல் (குழு -2):**

- அரசியலில் 50% பெண்களின் பங்கேற்பு
- பெண்களின் தற்கொலை எண்ணிக்கை குறைத்தல்
- வேலைவாய்ப்பு, ஊதியத்தில் சமஅளவு
- பெண்களுக்கான சட்டங்கள் கொள்கைகளை நடைமுறைபடுத்துதல்
- பெண் சிசுக்கொலையை குறைத்தல்

- ஊட்டச்சத்து திட்டம் கொண்டு வருதல்
- பெண்கள் பங்களிப்பு காவல்துறை மற்றும் ராணுவத்தில் இருத்தல்
- பாலியல் சுரண்டலை குறைத்தல்

**பெண்களை வலுப்படுத்தல் (குழு- 3):**

- பெண்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குதல் மற்றும் சமகூலி வழங்குதல்
- அரசியலில் பெண்களின் பங்கை அதிகரித்தல்.
- தாய்சேய் நலன் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- பெண் உழைப்பைக்கு சமுக அந்தஸ்து வழங்குதல்
- பெண்களுக்கு கட்டாயக்கல்வி
- வரதட்சணைக்கு எதிரான நடவடிக்கை
- பெண்சிசு மரணம் தடுத்தல்.
- பெண்களின் சேமிப்பு அதிகப்படுத்துதல்.
- குழந்தை பாதுகாப்பு மையம் உருவாக்குதல்.
- பெண்களுக்கான வலையமைப்பினை, செயல்பாட்டை அதிகரித்தல்.
- உயர்பதவிகளில் பெண்கள் பங்களிப்பு ஊக்குவித்தல்.

இறுதியாக சந்தை, பொருளாதாரம் பற்றிய கூடுதல் தகவல்களும் பகிந்து கொள்ளப்பட்டது. மற்ற நாடுகளுக்கு தேவையானவற்றை நம் நாட்டில் பயிரிடுவதன் மூலம் நம் நாட்டிற்கு அதிக பாதிப்பு ஏற்படுத்துகிறது. பன்னாட்டு கம்பெனியை அனுமதித்தல், கடல் சார்ந்த நாடுகளில் மருந்து கழிவுகளை அகற்றி கடலில் கலக்க அனுமதிப்பது போன்றவை நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சி மேம்பாடு என்ற ரீதியில் அழிக்கும் காரணிகள் என்று பயிற்சியாளர் விளக்கினார். மேலும் மருத்துவ கழிவுகளை கொட்ட அனுமதிக்கும் நாடுகளில் இந்தியாவும், இலங்கையும் அடங்கும். கடைசியாக சமூக பாதுகாப்பு எந்த நாடு தருகிறதோ அதுவே சிறந்த நாடு என்ற கருத்தும் முன் வைக்கப்பட்டது.

# பாலியலும் நலவாழ்வும்

## திருமிகு ரேவதி

பாலியலும், நலவாழ்வும் குறித்த பயிற்சியானது திருமிகு. ரேவதி அவர்களால் பயிற்றுவிக்கப்பட்டது. பயிற்சியின் தொடக்கத்தில் பங்கேற்பாளர்களிடம் சில கேள்விகள் கேட்கப்பட்டன. அவை,

1. மாதவிடாயின் போது வெளியேறும் இரத்தம் சுத்தமானதா? அசுத்தமானதா?
2. பிறக்கும் குழந்தை ஆணா? பெண்ணா? என தீர்மானிக்கப்படுவது யாரால்?
3. ஆண் பெண் மலட்டுத் தன்மை ஏற்படுவதற்கு காரணம் பால்வினை( STD Sexexually Transimitted Diseases) நோய் காரணமா?
4. BMI என்பது எதைக் குறிக்கிறது?
5. ஆண்களுக்கு 10 வகையான கருத்தடை சாதனங்கள் உள்ளனவா?
6. பாலியல் வன்கொடுமைக்கு ஆளான குழந்தைக்கு அந்த நபர் யார் என்று தெரியுமா?
7. கன்னிப்பெண்களுடன் உடலுறவு கொண்டால் பால்வினை நோய் குணமாகி விடுமா?
8. RTI என்பது எதைக் குறிக்கிறது?
9. சுயஇன்பத்தில் ஈடுபடுபவர்களின் திருமண வாழ்க்கை பாதிக்கப்படுமா?
10. பால்வினை நோய்யை குணப்படுத்த முடியுமா?
11. MTP( Medical Termination of Perganency) க்கு ஏற்ற கர்ப்ப காலம் எது?
12. பெண்களுக்கான கருத்தடைச் சாதனங்கள் பெண்களின் நலனை கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டதா?
13. கன்னித்திரை கிழிந்திருந்தால் அந்த பெண் நடத்தை கெட்டவளா?

மேற்கண்ட கேள்விகளுக்கு பங்கேற்பாளர்கள் பல்வேறு விதங்களில் பதில் அளித்தனர். பயிற்சியாளர் இக்கேள்விகளுக்கான பதில்களை இப்பயிற்சியில் நாம் அறிந்து கொள்ளப்போவதாகவும், அமர்வின் இறுதியில் பங்கேற்பாளர்கள் மீண்டும் இதற்கான பதில்களை அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

பங்கேற்பாளர்கள் மூன்று குழுக்களாக பிரிக்கப்பட்டு, ஆண் பெண் உருவ மற்றும் உடல் உறுப்புக்களை வரைந்து வருமாறு கேட்டுக் கொண்டார். நம் உடலை பற்றி நாம் எவ்வாறு அறிந்து வைத்திருக்கிறோம் என்பதை இப்பயிற்சி சுட்டிக் காட்டியது. வெளிப்புற உடலமைப்பை அனைவரும் தெளிவாக வரைந்திருந்தனர். உடலின் உள்ளே இருக்கும் பாகங்கள் தெளிவாக வரையப்படவில்லை. இதனை பயிற்சியாளர் சுட்டிக்காட்டினார். மீண்டும் சரியாக வரையாத குழுக்கள் வாய்ப்பு அளித்து அனைத்து உடல் உறுப்புகளும் வரைந்து வருமாறு கேட்டுக்கொண்டார். நமக்கு நமது உடலிலுள்ள உறுப்புகளின் அமைப்புகள் மற்றும் செயல்பாடுகளைப் பற்றிய தெளிவான பார்வை அவசியம் என தெளிவுப்படுத்தினார்.

**ஆரோக்கியம் - வரையறை:**

ஆரோக்கியம் என்பது உடலில் எந்தவித நோயும் இன்றி அல்லது ஊனமின்றி இருப்பது அல்ல, உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும், சமூக ரீதியாகவும் நலமாக இருப்பதுதான் ஆரோக்கியம் என்று உலக சுகாதார நிறுவனம் (WHO) கூறுகின்றது. மேலும், ஆரோக்கியம் என்பது சமூக மற்றும் பொருளாதார உற்பத்தியை மேற்கொள்வதற்கான திறன் என்றும் கூறலாம்.

**ஆரோக்கியத்தின் புதிய தத்துவங்கள்:**

**ஆரோக்கியம் என்பது**

- அடிப்படை மனித உரிமை
- பல உட்கூறுகளைக் கொண்டது.
- மேம்பாட்டின் ஒரு அங்கம்
- வாழ்க்கைத் தரத்தின் முக்கிய அம்சம்
- இதில் தனிமனிதனுக்கும், அரசுக்கும், சர்வதேச அமைப்புகளுக்கும் பொறுப்புள்ளது.
- ஆரோக்கியத்தை பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல் என்பது ஒரு சமூக முதலீடு
- உலக அளவிலான சமூக இலக்கு.

**ஆரோக்கியத்தின் குறியீடுகள்:**

- இறப்பு விகிதம்
- மனிதனின் சராசரி வாழ்நாள் / ஆயுட்காலம்
- சிசு மரணம் விகிதாச்சாரம் (IMR)
- 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் மரணம் விகிதாச்சாரம் (MR)
- மகப்பேறு மரணங்கள் விகிதாச்சாரம் (MMR)
- நோயினால் ஏற்படும் மரணங்கள்
- மாற்றுத்திறனாளிகள் எண்ணிக்கை
- ஊட்டச்சத்து நிலை
- மருத்துவ வசதிகள்
- மருத்துவ வசதிகளின் பயன்பாடு
- உடல், மன நலத்தின் குறியீடுகள்
- சுற்றுச்சூழல் குறியீடுகள்
- சமூக பொருளாதார குறியீடுகள்
- ஆரோக்கியத்திற்கான கொள்கைகள்
- தரமான வாழ்விற்கான குறியீடுகள்

**ஆரோக்கியத்திற்கான கொள்கைகள்:**

மக்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் இலக்குகளையும், அவற்றை முதன்மைப்படுத்தி வரிசைப்படுத்தி அதனை அடைவதற்கான வழிமுறைகளின் வெளிப்பாடே தேசிய ஆரோக்கிய கொள்கை ஆகும். 1977ஆம் ஆண்டு கொண்டு வரப்பெற்ற அனைவருக்கும் ஆரோக்கியம் (Health for All) என்பதன் நோக்கம் மக்கள் அனைவரும் சமூக மற்றும் பொருளாதார ரீதியில் மேம்பட்டு வாழ வழிசெய்யும் ஆரோக்கிய நிலையை அடைவது என்பதாகும். இக்கொள்கை 2000 ஆம் ஆண்டில் உலகத்தினர் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. 1978 ஆம் ஆண்டு அல்மா ஆட்டா பிரகடனத்தின் அடிப்படையில் ஆரம்ப சுகாதார கவனிப்பு நலம் மக்கள் கையில் என்பதை வலியுறுத்தியது.

**ஆண்டாயிரத்து வளர்ச்சி இலக்குகள்:**

- வறுமையும் பசிப்பிணியையும் வேரறுத்தல்.
- உலகளவில் ஆரம்பக் கல்வியை எட்டுதல்.
- பெண்களை ஆற்றல்படுத்தி பாலின சமத்துவத்தை மேம்படுத்துதல்.
- குழந்தைகள் இறப்பைப் குறைத்தல்.
- மகப்பேறு நலத்தை மேம்படுத்துதல்.
- HIV/ AIDS, மலேரியா மற்றும் பிற உயிர் கொல்லி நோய்களைத் தடுத்தல்.
- நிலைத்த சுற்றுப்புறச்சூழலை உறுதி செய்தல்.
- உலகளாவிய பங்கேற்பின் மூலம் மேம்பாடு காணுதல்.

**i. பொதுச் சுகாதாரச் சட்டம்:**

18 ஆம் நூற்றாண்டின் தொழிற்புரட்சியின் விளைவாக 1848ம் ஆண்டில் பொதுச் சுகாதாரச் சட்டம் ஏற்படுத்தப்பட்டது. அமெரிக்கா மற்றும் இந்தியாவில் இச்சட்டம் 1850ம் வருடமும், பிரான்ஸ், ஆஸ்திரேலியா, ஸ்பெயின், ஜெர்மனி, இத்தாலி, பெல்ஜியம் ஆகிய நாடுகளில் 20 ஆம் நூற்றாண்டின் துவக்கத்திலும் கொண்டு வரப்பெற்றது. சேரிகள், ஜனநெருக்கடி, நகாப்புறங்களில் குப்பைகளின் தேக்கம், பெண் குழந்தை இறப்பு, தொற்றுநோய்கள் மற்றும் சமூக பிரச்சனைகள் உள்ளிட்டவற்றை தடுக்கும் நோக்கத்தில் இச்சட்டம் கொண்டு வரப்பெற்றது.

**பொது சுகாதாரம் என்பது சமூக முயற்சியால் நோய் தடுக்கும், வாழ்நாள் நீட்டிக்கும் ஆரோக்கிய மேம்பாட்டிற்கான அறிவியல் மற்றும் கலை ஆகும்.**

**பொது சுகாதார கருத்தாக்கத்தில் கொண்டுவரப்பட்ட மாற்றங்கள்:**

- 1881-1920 நோய் தடுப்பு நிலை— சுகாதார மேம்பாட்டிற்கான சட்டங்கள் மற்றும் மறுசீரமைப்புத் திட்டங்கள்
- 1920-1960 - **ஆரோக்கிய மேம்பாட்டு நிலை** - தாய் சேய் நலம், பள்ளிச் சுகாதாரம், மன நலம் மற்றும் மறுவாழ்வு, தொழிற்சாலைகளில் பணியாளர் நலம் தனிநபர் ஆரோக்கியத்தின் மீதான அக்கறை, பொறுப்பு ஏற்பட்டது.
- 1960-1980 - **சமூக சீரமைப்பு நிலை** - தொற்று நோய்கள் கட்டுப்படுத்தப்பட்ட நிலையில் புற்றுநோய், இருதய நோய்கள், சாக்கரை நோய், போதை போன்ற பிரச்சனைகள்
- 1980 - 2000 — **அனைவருக்கும் ஆரோக்கியம்.**

அனைவருக்கும் ஆரோக்கியம் என்பது,

- அனைவரும் உன்னத ஆரோக்கிய நிலையை அடைதல்
- ஆரோக்கியம் பெறுவதற்கான தடைகளை அகற்றுதல்
- சத்துணவுக் குறைபாடு, அறியாமை, நோய்த்தொற்று, மாசுபட்ட குடிநீர், சுகாதாரமற்ற இருப்பிடம் போன்றவற்றை நீக்குதல்.

**இருபெரும் சீரிய இயக்கங்கள்:**

- **அடிப்படைச் சுகாதார சேவைகள்** — ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்கள் வாயிலாக அடிப்படை சுகாதாரத்தை பேணுதல்.
- **சமுதாய மேம்பாட்டுத் திட்டம்** — சமுதாய பங்கேற்புடன் சுகாதாரத்தை பேணுதல்.

**தேசிய சுகாதாரத் திட்டங்களின் நோக்கங்கள்:**

வளரும் நாடுகளில் அதிகப்படியான இறப்பிற்கு தொற்று நோய்கள், மாசுபட்ட குடிநீர், வயிற்றுப்போக்கு போன்றவை காரணங்களாக அறியப்படுகின்றன. எனவே, சுற்றுப்புற சுகாதார மேம்பாடு, ஊட்டச்சத்து நிலையில் மேம்பாடு, தொற்று நோய்களை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதுடன் அறவே

ஒழிப்பது ஊரகப்பகுதி மக்களின் ஆரோக்கிய மேம்பாடு மற்றும் மக்கள் தொகை கட்டுப்பாடு போன்றவற்றை தேசிய சுகாதாரத் திட்டங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளன.

### மக்கள் தொகைக் கட்டுப்பாடு:

மக்கள் தொகைக் கட்டுப்பாட்டு முறைகளின் இலக்கு பெண்களாகவே உள்ளனர். அவர்களது மாதம் ஒருமுறை வெளியேறும் ஒரே ஒரு கருமுட்டையை தான், ஒரு உடலுறவிலேயே லட்சக்கணக்கில் வெளியேறும் விந்தணுக்கள் அல்ல. ஆனால் ஒரு ஆண் ஒரே நாளில் ஆறுக்கு மேற்பட்ட பெண்களை கருத்தரிக்கச் செய்யமுடியுமென புள்ளி விபரங்கள் கூறுகின்றன. தேசிய மக்கள் தொகைக் கொள்கையானது, மக்கள் தொகை வளர்ச்சி மற்றும் பிறப்பு விகிதத்தைக் குறைக்கும் எண்ணத்தில் உருவாக்கப்படுகின்றது. 1976 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் உருவாக்கப்பட்ட முதல் தேசிய கொள்கையில் சட்ட ரீதியான திருமண வயது பெண்ணிற்கு 15லிருந்து 18 என்றும் ஆணிற்கு 18லிருந்து 21 என்றும் உயர்த்தப்பட்டது. 2000 ஆம் ஆண்டு தேசிய மக்கள் தொகைக் கொள்கையானது, வளரிளம் பெண்களின் திருமண வயதைத் தள்ளிப்போடுவது, சிறு குடும்ப வரையரையை தீவிரமாக்க முனைவது, குடும்ப நலத்திட்டத்தை மக்களை மையப்படுத்தியதாகச் செய்தல் போன்றவற்றை உள்ளடக்கியிருந்தது. ஆணிற்கு 18லிருந்து 21 என்றும் உயர்த்தப்பட்டது. 2000 ஆம் ஆண்டு தேசிய மக்கள் தொகைக் கொள்கையானது, வளரிளம் பெண்களின் திருமண வயதைத் தள்ளிப்போடுவது, சிறு குடும்ப வரையரையை தீவிரமாக்க முனைவது, குடும்ப நலத்திட்டத்தை மக்களை மையப்படுத்தியதாகச் செய்தல் போன்றவற்றை உள்ளடக்கியிருந்தது.

### கருத்தடை முறைகள்:

கருத்தடை முறைகளில் தற்காலிக இடைவெளி முறைகள்(Spacing Methods) என்பது, Barrier Methods, Intra Uterine Devices, Hormonal Methods (Oral pills & Depot), Post Conceptional Methods போன்ற வகைகளாக பிரிக்கலாம். இவை அன்றி அவசர கால மற்றும் நிரந்தர கருத்தடை முறைகள் உள்ளன. அவசர கால கருத்தடை முறையில் பாதுகாப்பற்ற உடலுறவிற்கு பின் 48 மணி நேரத்தில் IUD அல்லது மாத்திரைகள் பயன்படுத்தக் கூடியவை. நிரந்தர கருத்தடை முறை என்பது, அறுவை சிகிச்சை முறை ஆகும். இது பெண்களுக்கான அறுவைச்சிகிச்சை டியூபக்டோமி லேப்ராஸ்கோபிக் என்றும், ஆண்களுக்கு நோ ஸ்கால்பல் வாசக்டமி என்றும் அழைக்கப்படுகின்றன. நிரந்தர அறுவை சிகிச்சை முறைகளில் ஆண்களுக்கான வாசக்டமி மிக எளிய முறையாய் இருந்தும் 1 சதவீதத்திற்கும் குறைவானவர்களே செய்து கொள்கின்றனர். பெண்களுக்கான கருத்தடை முறைகளும் அதனால் ஏற்படும் பக்க விளைவுகளும் பின்வருமாறு:

| கருத்தடை முறைகள் | பக்க விளைவுகள் |
|---|---|
| **Barrier methods** | எரிச்சல், அரிப்பு |
| **IUD – Intra Uterine Devices** | இரத்தப்போக்கு (10-20%), வலி (15 - 40%), கூபகத் தொற்று (2 - 8 times more), துளை விழுதல் (1:150 -1:9000), கர்ப்பந்தரித்தல்(3%), கருக்குழாயில் கர்ப்பந்தரித்தல் (2 to 8 / per 1,000), இறப்பு (1/1,00,000) |
| **Hormonal methods – Oral pills இயக்குநீர் அடிப்படையிலான முறைகள்** | இருதய கோளாறுகள், புற்று நோய், வளர் சிதைவில் மாற்றம், புரத மாறுபாடு, இரத்த அழுத்தம் அதிகரித்தல், இரத்தத்தில் குளுக்கோஸ் அளவு உயருதல், கல்லீரல் செயல்பாட்டில் குளறுபடி, எடை அதிகரித்தல் (25%), இரத்தப்போக்கு, தலைவலி, ஒற்றைத் தலைவலி |
| **Hormonal methods – Injectables** | எடை அதிகரிப்பு, ஒழுங்கற்ற மாதவிடாய், நாள்பட்டு கருவுறுதல், இரத்தப்போக்கு |

Spacing methods – தற்காலிக முறைகள் அல்லது இடைவெளிக்கான முறைகள் எனப்படுகின்றன. செயற்கை கருத்தடை முறைகளினால் பல்வேறு விதமான பிரச்சனைகள் ஏற்படுகின்றன. இம்முறைகள் யாவும் பெண்கள் பயன்படுத்தக் கூடியதாக இருப்பதால், பெண்களின் ஆரோக்கியத்தை பெரிதும் பாதிக்கக்கூடியதாக இருக்கின்றன. ஆனால் ஆண்கள் பயன்படுத்தும் கருத்தடை முறைகள் ஒரு சிலவே பிரயோகத்தில் உள்ளன. அவை ஆண்களுக்கு எவ்வித பாதிப்பையும் உண்டாக்குவதில்லை. இருந்த போதிலும் அதிகமாக பெண்களே குடும்பக் கட்டுப்பாடு முறைகளைச் செய்து கொள்ள வலியுறுத்தப்படுகின்றனர். கருக்கலைப்பும் குழந்தைப்பிறப்பை தடுக்கும் ஒரு முறையாக கடைப்பிடிக்கப்படுகிறது. ஒரு பெண் கருக்கலைப்பு செய்து கொள்ளும் போது 300 மி.லி முதல் 500மி.லி வரை இரத்தம் வீணாகின்றது.

**1987 ஆம் ஆண்டு மும்பையில் 40,000 பெண் கருக்கொலைகள் நிகழ்ந்துள்ளன. 1984 ஆம் ஆண்டில் மும்பையில் ஒரே கிளினிக்கில் 16,000 கருக்கொலைகள் நடந்துள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.**

மேலும் பெண்கள் மாதவிடாய் காலங்களில் கடைபிடிக்க வேண்டிய சுகாதாரமுறைகள் குறித்தும் விளக்கினார். ஒரு பெண் தன் வாழ்நாளில் 7 வருடங்கள் மாதவிடாய் காலங்களாக உள்ளது. ஒவ்வொரு மாதமும் 30-50 மி.லி (அதிக பட்சமாக 80 மி.லி) இரத்தம் வெளியேறுகிறது. ஒரு பெண் தன்னுடைய வாழ்நாளில் 7 ஆயிரம் முதல் 13 ஆயிரம் நாப்கின்கள் அல்லது துணியை பயன்படுத்துகிறாள் என்று கூறினார். மேலும் மாதவிடாய் காலங்களில் நாம் உட்கொள்வேண்டிய உணவுகள், மேற்கொள் வேண்டிய சுகாதார முறைகள், சுத்தமான கழிப்பறையை உருக்குவதன் அவசியம் மற்றும் பயன்படுத்திய நாப்கின்களை அப்புறப்படுத்தும் முறைகள் குறித்தும் விளக்கினார். மேலும் ஒவ்வொருவரும் தங்கள் எவ்வளவு எடை இருக்க வேண்டும் என்பதை விளக்கும் BMI (Body Mass Index) குறித்து விளக்கினார்.

BMI (Body Mass Index) = Mass (Kg) / Hieght * $M^2$

BMI அளவின் அடிப்படையில்

12 - 18 – குறைவான எடை

19-21 – சரியான எடை

22 -29 – அதிக எடை

30-40 – உடல் பருமன்

இவ்வாறாக ஒருவரின் உயரம் மற்றும் உடல் எடையை வைத்து அவர் உயரத்திற்கு ஏற்ற எடையில் இருக்கிறாரா என்பதை அளவிட முடியும் என பயிற்சியாளர் விளக்கினார்.

பயிற்சியின் இறுதியில், பயிற்சி தொடங்கும் போது கேட்கப்பெற்ற கேள்விகளுக்கு விடைகளை பயிற்சியாளரே கூறினார். மாதவிடாயின் போது வெளியேறும் இரத்தம் சுத்தமானதே. கருவில் குழந்தையின் பாலினத்தை தீர்மானிப்பது ஆணே. BMI (Body Mass Index) குறிக்கிறது. ஆண்களுக்கு 3 வகையும் பெண்களுக்கு 10 வகையான கர்ப்பத்தடை சாதனங்கள் உள்ளன. பாலியல் வன்கொடுமைக்கு ஆளான குழந்தைக்கு வன்முறையாளர் குறித்து 84% தெரியும். இங்கு RTI என்பது Reprodictive Track Infection னை குறிக்கும். சுயஇன்பம் கொள்கிறவர்கள் திருமண வாழ்க்கையை பாதிக்காது. தற்போது இளம் வயதில் கணவனை இழந்து மறுமணபுரிந்து கொள்ள முடியாத சூழலிலுள்ள பெண்களுக்கு சுயஇன்பம் செய்து கொள்ள ஆலோசனை வழங்கப்படுகிறது. MTP க்கு ஏற்ற கர்ப்ப காலம் 12 வாரங்கள், அதிக பட்சம் 20 வாரங்கள் ஆகும். பெண்களுக்கான கருத்தடை சாதனங்கள் பெண்களின் நலனை கருத்தில் கொண்டு உருவாக்கப்படவில்லை. கன்னித்திரை கிழிந்திருந்தால் அந்த பெண் நடத்தை கெட்டவள் அல்ல. கன்னிப்பெண்களுடன் உடலுறவு கொண்டால் பால்வினை நோய் குணமாகி விடும் என்பது மூடநம்பிக்கை. பால்வினை நோயை குணப்படுத்த முடியும் என தன்னுடைய கேள்விகள் அனைத்திற்கும் தானே பதிலளித்து பயிற்சியை நிறைவு செய்தார் பயிற்சியாளர்.

# பெண்களின் மனநலம்
## டாக்டர். செல்வமணி

மனம் என்பது உடலையும் உயிரையும் இணைக்கக்கூடியது. உருவமில்லாத ஒன்று. சிந்தை, செயல்பாடு, உணர்ச்சி இவற்றை உள்ளடக்கியது தான் மனநலம் ஆகும். சிந்தனைகள் மூன்று விதம் Consious(வெளிமனம்) Subconsious (உள்மனம்) Unconsious(ஆள்மனம்). பொதுவாக மனநல மருத்துவரிடம் சென்றாலே மனநலம் பாதிக்கப்பட்டவர் என்ற எண்ணம் சமூகத்தில் நிலவி வருகிறது. சமூகத்தால் அவர்கள் ஒதுக்கி வைக்கப்படுகிறார்கள்.

**நல்ல மனநலம் உடையவர்கள்:—**

தன்னை சார்ந்த, சமுதாயம் சார்ந்த விஷயங்களில் சமூகமான உணர்வோடு இருப்பவர். நல்ல சிந்தனை, கண்ணோட்டம், அறிவு சுற்றுப்புறத்திற்கு ஏற்ற உணர்வோடும் இருப்பார்கள்.

**மனநலம் பாதிக்கப்பட்டவர்கள்:—**

சிந்தனை, செயல் மற்றும் உணர்ச்சிகளில் மாற்றம் இருக்கும். (எ.கா) தற்கொலை செய்ய தூண்டும் எண்ணம் அதிகமாக காணப்படும். மற்றவர்களுக்கு தீங்கு விளைவிப்பார்கள். முடிவு எடுக்கும் திறனும் குறைவாக காணப்படும்.

**மனநலம் பாதிப்பிற்கான காரணங்கள்:—**

பரம்பரை ஜீன்கள்
அடிபடுதல்
ஆளுமை தன்மை
ரசாயன மாற்றம் — சுரப்பிகள் அதிகம் சுரப்பதால்
சமூக சூழ்நிலை
குடும்ப சூழல்
குழந்தை வளர்ப்பு

**மனஅழுத்தத்திற்கான காரணங்கள்:—**

அதிர்ச்சியில் வந்த மனஅழுத்தம்
உடல் ரீதியான பாதிப்பு
மன ரீதியான பாதிப்பு
பாலியல் ரீதியான பாதிப்பு

### Histidia:-

Histidia-யை என்பது ஒரு வகை மனதளர்ச்சி. அடக்கி வைத்த உணர்ச்சிகள் மேலோங்கி வரும் பொழுது அது உடல் ரீதியாக வெளிப்படும். மனதிலுள்ள உணர்வுகளை அல்லது மன அழுத்தங்களை பிறரிடம் பகிர்ந்து கொள்ளும் போது இதனை குணப்படுத்தலாம். (எ.கா:1994-ல் நடந்த நிகழ்வு Histidia-விற்கு எ.கா கூறப்பட்டது) ஒரு பெண் தலைமுடியை அவிழ்த்து விட்டு, தலைவலி என்று கூறி தலையை சுவற்றில் முட்டிக்கொள்வாள். வசதியான வீட்டுப்பெண்ணாக இருந்த போதிலும் இக்காரணத்தால் அவளுக்கு திருமணம் நடக்கவில்லை. இறுதியாக மனநல மருத்துவரிடம் ஆலோசனைக்கு செல்லும்போது தான் நோய்க்கு காரணமான உண்மைநிலை தெரிந்தது. என்னவென்றால் இந்த பெண் வயதிற்கு வராமல் சிறு வயதில் இருக்கும் பொழுது

சித்தப்பாவின் மகன் பாலியல் வன்கொடுமை செய்துள்ளான் என்பதை மருத்துவரிடம் மட்டும் கூறினாள். அப்பொழுது ஆலோசனை பெற்று வீட்டிற்கு அனுப்பப்பட்டாள். அதன் பிறகு மூன்றாவது முறையாக அவன் வன்முறைக்கு உட்படுத்தும்போது அவனது கையை கடித்துள்ளாள். அதன் பிறகே வீட்டிலுள்ள எல்லோருக்கும் உண்மை நிலை தெரிய வந்தது. தற்பொழுது தகுந்த மாத்திரைகள் உட்கொண்டு குணமாகி தன் படிப்பையும் தொடர்ந்து, நல்ல நிலைமையில் உள்ளாள் என்றார்.

**Obsessive Personality:-**

ஒரு விஷயத்தினை பற்றிய எதிர்பார்ப்புகள் அதிகமாக இருக்கும். தேவையற்ற பயம், ஒரு செயலை மீண்டும் மீண்டும் செய்வார்கள். ஒரு நிகழ்வு நடக்காமலே அது நடந்து விடுமோ என பயப்படுவார்கள். எ.கா:— கணவன், மனைவி இருவரும் வெளியூருக்கு பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்தனர். அப்பொழுது அந்த பெண்ணிற்கு வீட்டில் கேஸை அணைத்து விட்டோமா என்ற எண்ணம் மனதிற்குள் ஓடிக் கொண்டே இருந்தது. மூன்று முறை தன் கணவனிடம் அணைத்து விட்டேனா என்று கேட்டுள்ளார். கணவரும் நீ அணைத்து விட்டாய் நான் பார்த்தேன் என்று கூறியுள்ளார். அதன் பின்னரும் பக்கத்து வீட்டிற்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு விசாரித்துள்ளார். அதையும் மீறி அந்தப்பெண் பயணத்தை பாதியில் நிறுத்திவிட்டு வீட்டிற்கு வந்து கேஸை பார்த்துள்ளார். ஆனால் கேஸ் அணைக்கப்பட்டு தான் இருந்தது.

**Anxiety:**

பதட்டமாகவே இருப்பது. எ.கா: மனஅழுத்ததின் வெளிபாடாக சாமி வந்தது போல் ஆடுவது.

**Menia: (மித மிஞ்சிய மனஅழுத்தம்)**

இயல்பாக இல்லாமல் ஒரே வேலையை திரும்ப திரும்ப செய்வது. எ.கா: அதிக சாமி பக்தி, திருநீறு அதிகம் இட்டுக்கொள்வது, கோவிலுக்கு அதிக முறை செல்வது, ஒரே நாளில் இரண்டு மூன்று தடவை குளிப்பது போன்ற செயல்பாடுகளில் ஈடுபடுவார்கள்.

**Panic Disorder:-**

விட்டு விட்டு வரும் மன அதிர்ச்சி, தேவையில்லாத விஷயங்களுக்கு கற்பனை செய்து கொண்டு பயப்படுவது. எ.கா: நெஞ்சுவலி என்று அவர்க்கு இருக்கவே இருக்காது ஆனால் நெஞ்சு வலி இருப்பது போல் கற்பனை செய்து கொண்டு வலியை உணர்வது.

**Catotonic (ஸ்கிஸோபினியா)—மனசிதைவு :**

உடல் அசைவுகள் அதிகமாக இருக்கலாம் அல்லது உடல் அசைவே இல்லாமல் இருக்கலாம். எ.கா: நடந்து கொண்டே இருப்பர். இது போன்ற பாதிப்பு ஏற்படும். 90% பெண்கள் பிரசவ காலத்திற்கு பிறகு மனஅழுத்ததிற்கு உள்ளாகும் போது ஒரு மாய குரல் அவர்களை கட்டளையிடுவது போல் தோன்றும். எ.கா: குழந்தையை கொன்று விடு என்று சொல்வது இதற்கு காரணம் சேரோட்டின் என்ற சுரப்பி அதிகளவு சுரக்கும் போது இந்த நோய் வரும்.

**Depression - மன அழுத்தம்:**

அதிக அளவிலான பெண்கள் மாதவிடாய் நிறுத்தத்தின் போது மனஅழுத்தத்திற்கு உள்ளாகிறார்கள். எ.கா: திருமணமான ஒரு பெண்ணுக்கு தனக்கு குழந்தை பிறந்தவுடன் கண் தெரியவில்லை என்று கூறினார். ஆனால் அனைத்து பரிசோதனைகளும் செய்யப்பட்டதில், கண்ணில் எந்த பிரச்சனையுமில்லை என்று அறிக்கை வந்தது. பிறகு மனநல மருத்துவரிடம் சென்று பார்க்கும் போது தான் உண்மை தெரியவருகிறது. மாமியார் ஆண் குழந்தைதான் பிறக்க வேண்டும் பெண்

குழந்தை பிறந்தால் வீட்டிற்குள் வராதே என்று கூறியுள்ளார். ஆதனால் அவளுக்கு பிறந்த பெண் குழந்தையை பார்த்ததும் அதிர்ச்சியிலே அவளது எண்ணம் கண் தெரியாமல் இருந்துள்ளது. கண்ணில் எந்த பாதிப்பும் உங்களுக்கு இல்லை என்று மனதளவில் அந்த பெண்ணுக்கு பதிவு செய்யப்பட்ட பிறகு மாமியாரிடமும் கலந்து பேசி அந்த பெண்ணின் குடும்பத்தில் சுமூகமான சூழலை கொண்டு வந்து தற்பொழுது நல்ல முறையில் வாழ்ந்து வருகிறார்.

**பங்கேற்பாளர்கள் மனநலம் தொடர்பாக பகிர்ந்து கொண்ட செய்திகள்:—**

ஒரு குடும்பத்தில் தொடர்ந்து பள்ளிக்கு சென்றிருந்த மாணவன் திடீரென பள்ளி செல்ல மாட்டேன் என்று கூறியுள்ளான். இறுதியில் மனநல மருத்துவரிடம் சென்ற பிறகு தான் உண்மை தெரிந்தது. ஹாஸ்டலில் தங்கி படித்துள்ளான். அங்கு மிக கடினமாக எல்லோரும் நடந்து கொள்வார்களாம். அதனால் வீட்டிற்கு வந்துள்ளான். ஆனால் வீட்டில் தங்கையிடம் இருந்தும் அவனுக்கு அன்பு கிடைக்கவில்லை. தாய் வேறொருவரிடம் பாலியல் உறவு வைத்துக் கொண்டிருக்கும் போது பார்த்துவிட்டான். தற்பொழுது Counselling மூலம் சமாதானபடுத்தி உடல்நிலையில் பிரச்சனை இல்லாமல் நல்ல முறையில் வாழ்ந்து வருகிறான்.

இலங்கையில் ஒரு பெண் கர்ப்பவதி ஆகாமலே, கர்ப்பவதியென நினைத்துக் கொண்டு அலுவலகத்திலும் பேறுகால விடுமுறை தரப்பட்டது. ஆனால் 11 மாதம் ஆகியும் குழந்தை பிறக்கவில்லை வயிறும் பெரிதாக இருந்தது என்றார். அதற்கு மருத்துவர் (பயிற்சியாளர்) கூறினார். ஹார்மோன் பிரச்சனையால் வயிறு பெரிதாகும். கால் வீங்கும் அவர் ஆழ்மனம் நினைப்பது போல் உடலில் மாற்றம் நிகழும் என்றார்.

**பங்கேற்பாளர் ஒருவர் அவருடைய நிலையை பகிர்ந்து கொண்டது:—**

7 வருடத்திற்கு முன் அவருக்கு ஒரு மாயகுரல் கேட்டுக் கொண்டே இருந்துள்ளது. மனநல மருத்துவரிடம் ஆலோசனை பெற்று 7 வருடமாக மாத்திரை எடுத்துக்கொண்டு வருகிறார். ஆனால் தற்பொழுது மாத்திரை போடவில்லை என்றால் தூக்கம் வருவதில்லை. அது ஒரு பழக்கமாகவே மாறிவிட்டது என்று கூறினார். அதற்கு மருத்துவர் (பயிற்சியாளர்) திடீரென மாத்திரையை நிறுத்திவிட்டாலும் பிரச்சனை, தொடர்ந்து போட்டாலும் பிரச்சனைதான். ஆகையால் உங்கள் மருத்துவரிடம் ஆலோசனை பெற்று மாத்திரையின் அளவை கொஞ்சம் கொஞ்சமாக குறைத்துக் கொள்ளுங்கள் என்றார். மேலும் உடலுக்கு நோய் வரும் போது மருத்துவரை அணுகி சிகிச்சை பெறுவதை போல் மனநோய் ஏற்பட்டு மனநல மருத்துவரை அணுகி சிகிச்சை மேற்கொள்ள வேண்டும் என பயிற்சியாளர் மற்றும் பெண்கள் மனநல மருத்துவர் திருமிகு. செல்வமணி அவர்கள் கேட்டுக் கொண்டார்.

# வன்முறை மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள்
## திருமிகு.ஷீலு பிரான்சிஸ்

பங்கேற்பாளர்கள் ஒருவரையொருவர் அறிமுகப்படுத்திக் கொண்ட பின்னர் பயிற்சியாளர் கேள்வி ஒன்றை எழுப்பினார். பெண்களுக்கு எதிரான வன்முறைகள் இருக்கிறதா? இல்லையா? என்று கேட்டார். பங்கேற்பாளர்கள் அனைவரும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் சமூகத்தில் இன்று வரையிலும் நிலவி வருகிறது என்றே கூறினார்.

காலம் காலமாக ஆணாதிக்க சிந்தனை நிறைந்த சமுதாயத்தில் உள்ளோம். அதுவே பெண்களின் மீதான வன்முறைக்கு முக்கிய காரணமாக இருக்கிறது என்ற கருத்து முன்வைக்கப்பட்டது.

தனிமனிதன் மனதில் மாற்றம் உருவாக வேண்டுமானால் குடும்பம், ஜாதி, மதம், சமூகம், அரசியல், கல்வி, சுகாதாரம், காவல்துறை, நீதி, அரசு சாரா நிறுவனம், கலாச்சாரம், திருமணம், ஊடகம் போன்றவற்றில் சிந்தனை மற்றும் கட்டுப்பாடுகளை மாற்ற வேண்டும். இவற்றில் மாற்றம் உண்டாகும் போது தான் சமத்துவம், சமஉரிமை, சமநீதி, சமவாய்ப்புக்கான சந்தர்ப்பங்கள் உருவாகும் என்று கூறினார்.

வன்முறையின் தொடக்கம் குடும்பத்தில் இருந்தே ஆரம்பிக்கப்படுகிறது. வன்முறைக்கு உட்படுவோராக பெண் குழந்தைகள், இளம் பெண்கள், மாற்றத்திறனாளிகள், திருநங்கைகள், வயதான ஆண்கள், ஆகியோர் அடங்குவர். வன்முறையானது ஒடுக்கப்பட்ட, ஓரம் கட்டப்பட்ட, பலமில்லாதவர்கள் அதிகாரம் இல்லாதவர்கள் மீதே பிரயோகிக்கப்படுகிறது.

பெண்களின் அதிகாரம் பறிக்கப்படுகிறது. குறிப்பாக பெண்கள் குடும்பத்தில் தலைமை பொறுப்பை ஏற்று நடந்தாலும் அதிகாரம் மற்றும் முடிவு எடுக்கும் நிலை ஆண்களின் கையிலேயே உள்ளது. ஆணாத்திக்க சிந்தனையில் மாற்றம் வரவேண்டும். அப்படி மாற்றம் நிகழுமேயானால் பெண்களின் துன்புறுத்தல்கள் குறைய வாய்ப்புகள் உள்ளது என்று கூறினார்.

இதன் பின் பங்கேற்பாளர்கள் 7 குழுக்களாக பிரிக்கப்பட்டு வன்முறைக்கான காரணங்களும் அவற்றை தீர்க்கும் வழிமுறைகள் பற்றியும் குழு விவாதம் மேற்கொள்ளப்பட்டு கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டது.

**வன்முறைக்கான காரணங்கள் அவற்றை தீர்க்கும் வழிமுறைகள்:**

**குழு -1 (பொருளாதாரம் )**

**பிரச்சனைகள்:** உழைப்பு, ஊதியம், வரதட்சணை, சொத்து, சேமிப்பு

**மாற்றங்கள்:**

உழைப்பை ஆண்களும் பெண்களும் பகிர்ந்து செய்யக்கூடிய சிந்தனையை ஏற்படுத்த வேண்டும். ஆண், பெண் இருவருக்கும் சமவேலைக்கான சமகூலி வழங்கப்பட வேண்டும்.

பெண்களுக்கு சொத்துரிமை இருக்க வேண்டும். ஆண், பெண் இருவருக்கும் சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

மேற்கூறியவற்றில் மாற்றம் ஏற்பட்டால், சமவாய்ப்பு மற்றும் சமநீதி உள்ள சமுதாயம் உருவாகும். ஆணாத்திக்க சிந்தனையில் மாற்றம் வரவேண்டும் அப்படி மாற்றம் நிகழுமேயானால் பெண்களின் துன்புறுத்தல்கள் குறைய வாய்ப்புகள் உள்ளது என்ற கருத்தை பங்கேற்பாளர்கள் கூறினார்.

**குழு -2 (குடும்பம் மற்றும் திருமணம்)**

**பிரச்சனைகள்:**

பெண்களுக்கு முடிவு எடுக்கும் உரிமை இல்லாமை, அதிக வேலைப்பளு, சார்ந்து வாழ்தல், அடக்குமுறை, புரிந்துணர்வின்மை.

**மாற்றங்கள்:**

விரும்பிய வாழ்க்கையைத் தேர்வு செய்ய கலந்து ஆலோசித்தல், வரதட்சணை தடுப்பு சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தல், திருமணம் முடிந்த பின்பு பெண்களின் கல்விக்கு தடை செய்யாமை, சட்டத்தில் குறிப்பிட்ட வயதில் திருமணம் நடைபெற வழிமுறைகள் மேற்கொள்ளல், உண்மையான ஆணவங்களை பரிசீலனை செய்ய வேண்டும்.

**குழு-3 (சாதி, மதம், கலாச்சாரம்)**

**சாதி:—**

**பிரச்சனைகள்:**

சாதி மீறிய திருமணத்திற்கு எதிர்ப்பு, சாதிவாரியாக இடஒதுக்கீடு, அரசியல் பங்கேறபின்மை

**மாற்றம்:**

சீர்திருத்த திருமணம், விண்ணப்பபடிவங்களில் சாதிகள் கேட்கப்படுவதை ஒழித்தல், சட்ட மாற்றம்

**மதம்:—**

**பிரச்சனைகள்:**

சிறும்பான்மை மதத்தினருக்கு பாதுகாப்பின்மை, பெண் பூசாரிகள் அங்கீராமின்மை, பெண்களின் மீதான மத ரீதியான கட்டுப்பாடுகள் (பெண்கள் கருவறைக்குள் செல்ல அனுமதியின்மை...)

**மாற்றம்:**

சிந்தனை கொள்கைகளில் மாற்றம், விஷேச நிகழ்வுகளில் பெண் தலைமைத்துவத்தை ஊக்கப்படுத்தல், பிரச்சாரம் செய்தல்.

**குழு-4 (சட்டம் மற்றும் காவல், நீதி):**

**பிரச்சனைகள்:**

சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படாமை, ஆண்கள் உயர்அதிகாரியாக இருத்தல், விசாரணையின் போது பெண்களுக்கு பாதகமாக செயல்படுதல் (பாலியல் வன்கொடுமை), நீதியில் பாரபட்சம் காட்டுதல், லஞ்சம் வாங்குதல்.

**மாற்றம்:—**

அமுல்படுத்தப்பட்ட சட்டங்களை பற்றி மக்கள் அமைப்புகள் மற்றும் ஊடகங்கள் மூலம் மக்களுக்கு தெரியப்படுத்துதல், பெண்களின் பாதுகாப்பை உறுதிபடுத்துதல், நீதிதுறையில் பெண்களுக்கு இடம் அளித்தல், பெண்கள் அமைப்பு வழியாக உயர்மட்டங்களுக்கு அழுத்தம் கொடுத்தல்

**குழு-5 (அரசு சாரா நிறுவனம்)**

**பிரச்சனைகள்:**

விடுமுறை தருவதில்லை, அதிகமான உழைப்பு, ஊதியம் குறைவு, பாரபட்சம் காட்டுதல், வலையமைப்புகள் சிறப்பாக செயல்படாமை, நலதிட்டங்கள் சரியான முறையில் கிடைப்பதில்லை, ஊழியர்களுக்கிடையே முரண்பாடுகள் அதிகம், கடுமையான சட்டதிட்டங்களை கடைபிடித்தல், ஆண்கள் அதிகாரிகளாக இருத்தல்.

**மாற்றங்கள்:**

நாடகங்கள் மூலம் விழிப்புணர்வு, ஊழியர்கள் இணைந்து போராடுதல், காலத்திற்கேற்ப செயல்திட்டம் கொண்டு வருதல், கொள்கை ரீதியான மாற்றம்

**குழு-6 (ஊடகம் மற்றும் அரசியல்)**

**ஊடகம்:—**

**பிரச்சனைகள்:**

பெண்களை காட்சிப்பொருளாக சித்தரித்தல், திரைப்படங்களில் பெண்களை தாழ்த்தி அடிமைப்படுத்தி காட்டுதல், ஊடகங்களில் பெண்களின் பிரச்சனைகள் வெளிப்படுத்தும் விதம் வித்தியாசமாகவே உள்ளது. பெண்களுக்கு எதிரி பெண்களே என சித்தரித்து காட்டப்படுகிறது.

**மாற்றம்:**

ஊடக அமைப்புகளுடன் தொடர் பேச்சுவார்த்தை மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்துதல், RTI – சட்டத்தை பயன்படுத்துதல், கையெழுத்து பிரச்சாரம் செய்தல், மனு அளித்தல், பிரசுரங்கள் கொடுத்தல், சுய உதவிகுழுவினருக்கு விழிப்புணர்வு பிரச்சரம் செய்தல்.

**அரசியல்:—**

**பிரச்சனைகள்:**

பெண்களுக்கு முன்னுரிமையின்மை, அதிகாரத்தை பிரயோகிப்பதில் சிரமம் (பாதுகாப்பு, இடமாற்றம், பதவியிறக்கம்) பரம்பரை அரசியலிலும் ஆண்களுக்கு பின்தான் பெண், பிரபலமானவர்களுக்கு முன்னுரிமை(நடிகர்), பொருளாதார, சாதி அந்தஸ்துக்கு முன்னுரிமை, அரசியல் வன்முறை, பெண்களுக்கு பெயரளவில் மட்டும் பதவிகள், பெண்களின் பின் ஆண்கள் செயல்படுவது, பெண்கள் அரசியலில் ஈடுபடுதலை சமூகம் ஏற்றுக்கொள்ளாமை, சட்ட உருவாக்கத்தில் சமத்துவமின்மை, சட்டங்கள் அமுல்படுத்துவது இல்லை.

**மாற்றங்கள்:**

சட்டங்களை கையாளுதலில் — விழிப்புணர்வும் ஊக்குவிப்பும் அளித்தல், சமூகத்தில் விழிப்புணர்வு மூலம் பெண்களின் தன்நம்பிக்கை திறனை உயர்த்துதல், நடைமுறைகள் மற்றும் வழிவகைகள் பற்றிய தெளிவை உருவாக்குதல், பங்களிப்பு முறையில் சட்டங்கள் கொண்டு வருதல், தண்டனை சட்டங்களை நிறைவேற்றுதல், சமதீர்ப்பு வழங்குதல், பெண்களுக்கு ஆதரவு அளித்தல்.

**குழு– 7 (கல்வி மற்றும் நலம்)**

**கல்வி—**

**பிரச்சனைகள்:**

கல்வி, வேலைகள் தேர்ந்தெடுப்பதில் முடிவெடுக்க இயலாமை, பெண் குழந்தை என்ற காரணத்தால் உயர்கல்வி மறுப்பு, கல்வி நிலையங்களில் பாலியல் தொந்தரவுகள், இடப்பெயர்வு மற்றும் இளவயது திருமணத்தால் கல்வி தடைப்படுதல், பெண்கள் அதிகம் படித்தால் குடும்பத்தினரை மதிக்க மாட்டார்கள் என்ற தவறான கண்ணோட்டம்.

**மாற்றங்கள்:**

சம வாய்ப்பு மற்றும் விரும்பும் கல்வியை படிப்பதற்கு சுதந்திரம் கொடுத்தல், உயர் கல்வியில், பள்ளிகளில் கல்லூரிகளில் பாலியல் கல்வியை புகுத்துதல், பயிற்சி பட்டறை மூலம் சமூகத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்துதல், கல்வி நிலையங்களில் பாலியல் தொந்தரவுகளை தடுக்கும் வழிமுறைகளை மேற்கொள்ளல், குடும்ப ரீதியாக பெண்களின் கல்விகென பணத்தை ஒதுக்கீடு செய்தல்.

**நலம்:—**

**பிரச்சனைகள்:**

தொற்றுநோய்கள் மற்றும் பிற நோய்களினால் ஆயுட்காலம் குறைவு, பிரசவ கால இறப்பு,

மாற்றுதிறன் வாய்ந்த குழந்தை பிறப்பு வீதம் அதிகரித்தல், நலத்திட்டங்கள் அமுல்படுத்தப்படாமை, சுகாதார மையங்கள் இல்லாமை, அப்படி இருந்தால் அதனை நடைமுறைபடுத்தாமை. ஆண்களின் நலனுக்கு முக்கியத்துவம் தரும் சமுதாய பழக்க வழக்கங்கள்.

**மாற்றங்கள்:**
விழிப்புணர்வு அளித்தல், புதிய சுகாதார நிலையங்களை உருவாக்குதல், ஏற்கனவே உள்ள சுகாதார நிலையங்களின் இயங்கும் நிலையை கண்காணித்தல், போசாக்கு திட்டங்களை அமுல்படுத்தல், வரவு செலவு திட்டத்தில் சுகாதாரம் தொடர்பாக அதிக நிதி ஒதுக்கீடு செய்தல், சமுதாயதிலுள்ள பழக்க வழக்கத்தில் மாற்றம் கொண்டு வருதல் (பெண்கள் அனைவருக்கும் பரிமாறி விட்டு உணவு அருந்துதல், வீட்டரின் நலனுக்காக விரதம் இருத்தல் போன்றவை...)

பங்கேற்பாளர்கள் குழுவிவாதத்தின் மூலம் வெளி கொணர்ந்த அனைத்து கருத்துக்களும் மிகவும் முக்கியமானது என்று பயிற்சியாளர் கூறினார். ஆனால் மேற்கூறிய மாற்றங்கள் ஏற்பட சட்டங்கள் மற்றும் கொள்கைகள் மிக மிக அவசியமான ஒன்றாகும். சட்டம் கொள்கையை மாற்றாது. கொள்கைதான் சட்டத்தை மாற்றும் என்ற கருத்தையும் அவர் முன்வைத்தார்.

இத்தகைய வன்முறையை தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாக:—சட்டம் பற்றிய விழிப்பணர்வு, துண்டு பிரசுரங்கள், நாடகங்கள், கொள்கையில் மாற்றங்கள் போன்றவற்றை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

வன்முறைக்கு உட்பட்டோருக்கு ஆதரவாக:—பாதுகாப்பிடம், இடர் நிவாரண நிலையம், உளவள துறை நிலையம், சட்ட உதவிகள், மகளிருக்கான காவல்நிலையங்கள், மகளிருக்கான சட்டங்கள் இவற்றை அமைக்க வேண்டும்.மேலும் வன்முறையாளருக்கு கடுமையான தண்டனை, சீர்திருத்தம், விழிப்புணர்வு போன்றவை கொடுக்க வேண்டும் என்று கருத்துகளும் முன் வைத்தார்.

**ஆகவே முன்னெச்சரிக்கை நடவடிக்கை என்பது பாதிக்கப்பட வாய்ப்புள்ளவர்கள், பாதிப்பு ஏற்படுத்தும் வாய்ப்புள்ளவர்கள் அனைவருக்கும் வழங்கபடவேண்டும். ஒட்டு மொத்த சமூகத்திற்கும் விழிப்புணர்வு அவசியமான ஒரு தேவை என்ற கருத்துடன் இம்மார்வு முடிந்தது.**

# பெண்கள் உரிமையைப் பாதுகாத்திட சர்வதேச மற்றும் தேசிய அளவிலான உடன்படிக்கைகள்
## திருமிகு பவளம்

பெண்களின் உரிமையைப் பாதுகாத்திட சர்வதேச மற்றும் தேசிய அளவிலான உடன்படிக்கைகள் என்ற தலைப்பில் திருமிகு.பவளம் அவர்கள் பேசினார். சர்வதேச அளவில் உள்ள உடன்படிக்கைகள் யாவைஎன்ற வினா பங்கேற்பாளர்களிடையே கேட்கப்பட்டது. அதற்கான பதில்கள்,

| | | |
|---|---|---|
| **ICCPR** | - | குடிமை மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கை |
| **CEDAW** | - | பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான சர்வதேச உடன்படிக்கை |
| **ICESCR** | - | சமூக, பொருளாதார கலாச்சார உரிமைகள் குறித்த சர்வதேச உடன்படிக்கை |
| **CAT** | - | சித்ரவதையினைத் தடுப்பதற்கான உடன்படிக்கை |
| **ICERD** | - | இனம் சார்ந்த உடன்படிக்கை |
| **CRC** | - | குழந்தைகள் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான உடன்படிக்கை |

CEDAW எனப்படும் பெண்களுக்கெதிரான அனைத்து வகையான பாகுபாடுகளை ஒழிக்கும் உடன்படிக்கை 1979இல் உருவாக்கப்பட்டு 1981இல் நடைமுறைபடுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1993ஆம் ஆண்டிலே வியன்னாவில் நடைபெற்ற உலக பெண்கள் மாநாட்டில் பெண்கள் உரிமைகளும் மனித உரிமையே என்ற கொள்கையானது கொண்டு வரப்பெற்றது.

சிடா உடன்படிக்கையானது, ஆண் பெண் இடையே சமநிலை மற்றும் சமத்துவத்தையும், பாகுபாடின்மையையும் மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. ஏற்றத்தாழ்வுகள் சமூகத்தால் உருவாக்கப்பட்ட ஒன்றாகும். பெண்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கான வாய்ப்புகளையும், வசதிகளையும் செய்து கொடுத்தல் வேண்டும் என்பதனை வலியுறுத்தும் சிடாவில் 30 ஷரத்துகள் மற்றும் பொதுப்பரிந்துரைகள் உள்ளன. அவை,

- **விதி 1 -** விரிவான முறையில் ‘‘பாகுபாடு’’ என்பதற்கான வரையறை கூறப்பட்டுள்ளது.
- **விதி 2 - 4 -** பாகுபாட்டை ஒழிப்பதற்கான, பெண்களின் மேம்பாட்டிற்கான மற்றும் ஆண்கள் பெண்களிடையே சமத்துவத்திற்கான அரசின் கடமைகள், அரசாங்கத்தின் பொறுப்புகள் என்னென்ன என்பதனைப் பற்றிக் கூறுகின்றது.
- **விதி 5 -** கலாச்சாரத்தின் அடிப்படையில் ஆண், பெண்ணின் பங்குகளைப் பற்றிக் கூறுகின்றது. கருத்தரிப்புக் காலங்களிலும், குழந்தைப் வளர்ப்பிலும் ஆண், பெண் இருவருக்கும் சமமான பங்கு உள்ளது என்பதனை வலியுறுத்துகின்றது.

- **விதி 2 - 4 -** பாகுபாட்டை ஒழிப்பதற்கான, பெண்களின் மேம்பாட்டிற்கான மற்றும் ஆண்கள் பெண்களிடையே சமத்துவத்திற்கான அரசின் கடமைகள், அரசாங்கத்தின் பொறுப்புகள் என்னென்ன என்பதனைப் பற்றிக் கூறுகின்றது.
- **விதி 5 -** கலாச்சாரத்தின் அடிப்படையில் ஆண், பெண்ணின் பங்குகளைப் பற்றிக் கூறுகின்றது. கருத்தரிப்புக் காலங்களிலும், குழந்தைப் வளர்ப்பிலும் ஆண், பெண் இருவருக்கும் சமமான பங்கு உள்ளது என்பதனை வலியுறுத்துகின்றது.

- **விதி 6 -** மோசடி வஞ்சக் கடத்தல் வணிகம் பற்றிக் கூறுகின்றது. பெண்கள் குறிப்பாக இரண்டு காரணங்களுக்காக அதிகமாக சுரண்டப்படுகின்றனர். 1. பாலியல் சுரண்டல், 2. வேலைக்காக சுரண்டல், 3. இலாபத்திற்காக பெண்ணின் உடல், உழைப்பு அனைத்தையும் சுரண்டுவது.
- **விதி 7 -** அரசியல் மற்றும் பொதுவாழ்வில் பெண்களின் பங்கேற்பு பற்றிக் கூறுகின்றது. வாக்களிக்கும் உரிமை, தேர்தலில் போட்டியிடல், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களோடு தன்னை இணைத்துக் கொள்ளுதல்,
- **விதி 8 -** ஆண்களுக்கு நிகராக சர்வதேச அமைப்புகளில் தங்கள் அரசாங்கம் சார்பில் பிரதிநிதிகளாகக் கலந்துகொள்ளவும், சர்வதேச அமைப்புகளில் வேலை வாய்ப்பினை பெறவும் நடவடிக்கை எடுப்பது குறித்து கூறுகிறது.
- **விதி 9 -** ஒரு பெண்ணிற்கான தேசிய அடையாளம் திருமணத்தின் வழியாகத் திணிக்கப்படக் கூடாது. குழந்தைகளின் அடையாளம் பெண்ணின் அடையாளத்தால் பாதிக்கப் படக்கூடாது.
- **விதி 10 -** கல்வியில் பெண்களுக்கும் ஆண்களைப் போன்ற சமஉரிமை கிடைக்கச் செய்து பெண்களுக்கு எதிரான பாகுபாட்டை ஒழிப்பதற்கான எல்லா உகந்த நடவடிக்கைகளையும் செய்ய வேண்டும் என வலியுறுத்துகிறது.
- **விதி 11 -** வேலை: பெண்களுக்குக் கூடுதல் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பது, பதவி உயர்வு கொடுப்பது, திறன்களை வளர்ப்பதில் பயிற்சி, பதவியுயர்வு கொடுப்பது, சமத்துவ ஊதியம், வேலைத்தரத்தின் அடிப்படையில் ஊதியம் மற்றும் சமூகப்பாதுகாப்பினையும் தர வேண்டும்.
- **விதி 12 -** சுகாதாரம்: ஆரம்பக் சுகாதார நிலையத்தில் எந்தவித பாகுபாடும், கட்டாய குடும்பக் கட்டுப்பாடும் இருக்கக்கூடாது. கருத்தரிப்புக் காலங்களில் கூடுதல் கவனம் தேவை.
- **விதி 13 -** அனைத்து சமூக, பொருளாதார பலன்களும் பெண்களுக்குக் கிடைக்கச் செய்தல். அனைத்துப் பெண்களுக்கும் வங்கிக்கடன் பெறும் உரிமையினை ஏற்படுத்தித்தர செய்தல்.
- **பதினான்காம் உறுப்பு:—** கிராமப்பெண்களின் பொருளாதாரச் சூழல், சுகாதார வசதிகள், குடியிருப்பு, தண்ணீர் விநியோகம், போக்குவரத்து தொடர்புகள்.
- **பதினைந்தாவது உறுப்பு:—** சட்டத்தின் முன் சமத்துவம்: அனைவரும் சட்டத்தின் முன் சமம். பெண்கள், தங்கள் விருப்பப்படி சுதந்திரமாகச் செயல்பட முழு உரிமையினை அளிக்க வேண்டும்.
- **பதினாறாவது உறுப்பு:—** திருமணம் மற்றும் குடும்ப சட்டங்களில் சமத்துவம்: திருமணத்தில் பெண்கள் இணையலாம், இணையாமலும் இருக்கலாம். தான் விரும்பியபடி துணையைத் தெரிவு செய்து கொள்ளும் உரிமை, குழந்தைப் பேறினைத் தெரிவு செய்யும் உரிமை போன்றவற்றினைப் பெண்களுக்கு அளிக்க வேண்டும். குழந்தைப் பராமரிப்பு இருவருக்கும் உரிமையானது. கட்டாயமாக திருமணங்கள் பதிவு செய்யப்பட வேண்டும்.

**உறுப்பு 17 - சிறப்புக் கண்காணிப்புக்குழு:**

சிடா உடன்படிக்கையினைக் கண்காணிக்க சிறப்பு கண்காணிப்புக்குழு ஒன்று உள்ளது. இவ்வுடன்படிக்கையினை ஏற்றுக் கொண்ட ஒவ்வொரு அரசும் இதனைச் சரியாக அமுல்படுத்தி உள்ளதா? என்பதனைக் கண்காணிப்பது இந்த குழுவின் வேலை ஆகும். இக்குழுவானது 23 உறுப்பினர்களைக் கொண்டது. இக்குழுவின் சந்திப்பு வருடத்திற்கு இரண்டு முறை (ஜனவரி மற்றும் ஜூன்) நியூயார்க்கில் நிகழ்கின்றது. இதில் ஒவ்வொரு உறுப்பினர் நாடும் சமர்பித்த அறிக்கையினைப் பற்றி விவாதித்து அதற்கான முடிவுகள் எடுக்கப் பெறுகின்றன. மேலும் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளை சந்தித்து இவ்விறுதி முடிவுகளை தெரிவித்து, தொடர் நடவடிக்கைக்கான சில பரிந்துரைகளையும் இக்குழு தெரிவிக்கும்.

**விதி 18 - சிடா அறிக்கை:**

உறுப்பினர் நாடு ஒவ்வொன்றும் உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டு உறுதியளித்த அடுத்த ஒரு வருடத்திற்குள் அந்நாட்டின் பெண்களின் நிலை குறித்த ஒரு அறிக்கையினையும், பின்னர் குறிப்பிட்ட கால இடைவெளிக்குள் உடன்படிக்கையின் மீது அந்நாட்டின் செயல்பாடுகள் குறித்த நிகழ்வறிக்கையினையும் சமர்ப்பிக்க வேண்டும். இந்தப் பொறுப்பினை இலங்கையில் நீதியமைப்பும், இந்தியாவில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பான அமைச்சகமும் ஏற்றுக் கொண்டுள்ளன. இந்தியாவானது கடந்த 2005ஆம் ஆண்டிலும், அதன்பின் 2010ஆம் ஆண்டிலும் தனது அறிக்கையினைச் சமர்பித்துள்ளது. அதே சமயத்தில், உள்ளூர் மட்ட அளவில் சமூக நிறுவனங்கள் உண்மை நிலையை ஆராய்ந்து, பிரச்சினைகள், ஆதாரங்கள், அரசு எந்தெந்த சட்டங்களை மீறியுள்ளது என்று அனைத்து விவரங்களையும் உள்ளடக்கிய ஓர் அறிக்கையினை தயாரித்து சிடா கண்காணிப்புக் குழுவிற்கு அளிக்கும். இதில் புள்ளி விவரங்கள் என்பது முக்கியமான ஒன்றாகும். சர்வதேச தளத்திற்குக் கொடுக்கக்கூடிய அறிக்கை உணர்வு பூர்வமாக இருக்கக்கூடாது தெளிவான விவரங்கள் அதில் குறிப்பிட வேண்டும்.

இதற்கு அடுத்த படியாக 19 முதல் 30 வரையிலான உறுப்புகள் சிடாவின் செயல்முறைகளைப் பற்றிக் கூறுகின்றது.

| அறிக்கை சமர்பிக்க வேண்டிய ஆண்டு | சமர்பித்த ஆண்டு | இறுதி கருத்துரை |
|---|---|---|
| 1994 | 1998 | 2000 |
| 1998 | 2005 | 2007 |
| 2002 | 2005 | 2007 |
| 2006 | - | - |
| 2010 | - | - |

## இலங்கையின் சிடா அறிக்கை:

1981ல் சிடா ஒப்பந்தத்தில் இலங்கை கையொப்பம் இட்டது. நான்கு வருடத்திற்கு ஒருமுறை சமர்பிக்கப்பட வேண்டிய சிடா அறிக்கையை இலங்கை அரசு இனப்போரின் காரணமாக ஒன்பது ஆண்டுகள் கழித்து 2011ம் ஆண்டு ஜனவரி 26ல் 5, 6 மற்றும் 7ம் தொடர் அறிக்கையை சமர்பித்தது.

**தொடக்க கருத்துரை:**

- பத்து வருடங்களுக்கு மேலாக போர் நடைபெற்றதால் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.
- அதிகளவில் பெண்களும் குழந்தைகளும் பாதிக்கப்பட்டுள்ளனர்.
- சிடாவில் கையெத்திட்டவுடன் பெண்களுக்கான உரிமைகளை மேம்படுத்தும் வழியில் தேசிய செயல்திட்டத்தில் பெண்களை மையப்படுத்தி செயல்திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.
- சட்ட திட்டங்களை மேம்படுத்த நீதியை நிலைநாட்ட சமரச செயற்குழு மூலம் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.
- பெண்களின் அரசியல் பங்கேற்பு குறைவாக இருப்பதாலும், பெண்களின் மீதான பாலியல் வன்கொடுமைகள் அதிகரிப்பதாலும் ,பெண்கள் வேலையின்மை விகிதம் அதிகமாக இருப்பதாலும், கிராமப்புற பெண்களின் பொருளாதார மேம்பாடு போன்ற செயல்களின் சிடா உடன்படிக்கை தேவையாக இருகிறது.
- குடும்பத்தில் தலைமைப்பொறுப்பு வகிக்கும் பெண்களை மேன்மை படுத்த சில உதவி திட்டங்களை அரசு வகுத்துள்ளது.
- பெண்கள் மீதான வன்முறைகள் குறைக்க தேவையான சட்டதிட்டங்களை வகுத்துள்ளது.

**சிடா கமிட்டி இலங்கை அரசிடன் முன் வைத்த கேள்விகள்:**

பெண்கள் வன்முறைக்குள்ளகுவதை தடுக்க எந்த வித சட்ட நடவடிக்கையும் இன்னும் எடுக்கப்படவில்லை. ஏன்?

பெண்கள் மீதான வன்முறைகள் பற்றி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. ஆனால் ஏன் விகிதங்களின் அடிப்படையில் தகவல் இல்லை?

இந்த அறிக்கை தயாரிப்பதில் சமூக நல அமைப்புகள் ஒருமுறை மட்டுமே குழுவாக கூடி தயாரிப்பில் ஈடுபட்டுள்ளனர். ஏன் பங்களிப்பு குறைவாகவே உள்ளது? சிடா ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டப்படி பாகுபாடுகளை ஒழிக்கும் வகையில் வரையறுக்கப்பட்ட சட்டதிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஏன்? என பல கேள்விகளை சிடா கமிட்டி இலங்கை அரசின் முன் வைத்துள்ளது என பயிற்சியாளர் விளக்கினார். அப்போது பயிற்சியில் கலந்து கொண்ட இலங்கை பங்கேற்பாளர்களில் சில தாங்கள் சிடா அறிக்கைக்காக பல்வேறு விஷயங்களை தொகுத்து அளித்தும் அவை எதுவும் இவ்வறிக்கையில் இடம்பெறவில்லை என்பது தங்களுக்கு மிகுந்த மனவேதனையை தருகிறது என்றும் பகிர்ந்து கொண்டனர்.

**சிடா விருப்ப உடன்படிக்கை:**

சிடாவினால் கொண்டு வரப்பெற்ற இந்த விருப்ப உடன்படிக்கை என்பது, பாதிப்புற்ற பெண்கள் நேரடியாக தங்களுடைய முறைப்பாடுகளை முன் வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குகிறது. எனினும் இந்தியா இதில் கையெழுத்திடவில்லை. ஆனால் இலங்கை அரசு இதில் கையெழுத்திட்டு ஏற்றுக்கொண்டதால் இவ்வாய்பை பயன்படுத்தலாம் என்று கூறி பயிற்சியாளர் அமர்வை நிறைவு செய்தார்.

# களப்பணி

# காந்திகிராம அறக்கட்டளை, காந்திகிராமம்

பயிற்சியின் ஆறாம் நாளான 06.03.2012 அன்று காலை 8 மணி அளவில் காந்திகிராம அறக்கட்டளையின் களப்பணி பயணம் தொடங்கியது. சரியாக காலை 9 மணி அளவில் காந்திகிராம அலுவலகத்திற்குள் பங்கேற்பாளர்கள் சென்றனர். அங்கு நிர்வாக அலுவலர் திரு.ராஜகோபாலன் அவர்களை சந்தித்து பங்கேற்பாளர்கள் அனைவரும் தங்களை பற்றி சுயஅறிமுகப்படுத்திய பின்னர் களப்பணிகளை பார்வையிட சென்றனர்.

காந்திகிராம் அறக்கட்டளை உருவாவதற்கு முக்கிய காரணமாக இருந்த பெண்மணி திருமிகு.சௌந்திரம்மாள் அவர்கள். இவரது வாழ்க்கை வரலாற்றையும் காந்தி கிராம அறக்கட்டளை உருவான விதம் பற்றியும் திருமிகு.ரேவதி அவர்களால் தெளிவாக விளக்கப்பட்டது.

**திருமிகு. சௌந்திரம்மாள் வரலாறு:**

சுதந்திரப்போராட்டத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திய திருமிகு.சௌந்தரம், சிறந்த மருத்துவராக, கல்வியாளராக, சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினராக, சமூக சீர்திருத்தவாதியாக, பெண்களின் மேம்பாட்டிற்காக இறுதி மூச்சு வரை செயல்பட்டவராகத்த திகழ்ந்தார். இருபதாம் நூற்றாண்டில் முற்பகுதி இந்திய வரலாற்றின் முக்கிய கால கட்டமாகும். நாடெங்கிலும் தலைசிறந்த தேசத்தலைவர்கள் அவதரித்தனர். சுதந்திரப்போராட்ட நீரோட்டத்தில் தங்களை இணைத்துக் கொண்ட குடும்பங்களில் டி.வி.சுந்தரம் அய்யங்காரின் குடும்பமும் ஒன்று. இக்குடும்பம் இந்தியச் சுதந்திரப்போராட்டத்தில் தமது குடும்பத்தைச் சார்ந்த பெண்களையும் ஆண்களுக்கு நிகராக களமிறங்கச் செய்தது.

இப்படிப்பட்ட செல்வச் செழிப்புமிக்க புகழ்பெற்ற குடும்பத்தில் 1905ஆம் ஆண்டு ஆகஸ்ட் 18 ஆம் தேதி ஒரு பெண் குழந்தை பிறந்தது. குழந்தையின் அழகைக்கண்டு அதற்கு சௌந்தரம் எனப்பெயரிட்டனர். தாய்வழியாக சுப்பிரமணிய பாரதியாரும், ஔவை பாட்டியும் சௌந்தரத்திற்கு அறிமுகமாயினர். பாரதியின் பாடல்களின் மீது கொண்ட மோகம், அவரைப் பாடகியாகவும் வீணை வாசிக்கக் கூடியவராகவும் செய்தது.

குழந்தை பருவ திருமண முறையை கற்றோர்களும் ஆதரித்த காலத்தில் சௌந்திரத்திற்கு 12 வயதில் சௌந்திரராஜன் என்பவருடன் திருமணம் செய்விக்கப்பட்டது. சௌந்தரராஜன் திருமணத்திற்குப் பின் மருத்துவப் படிப்பை பூர்த்தி செய்து மதுரை அரசு மருத்துவமனையில் பொறுப்பேற்றார். இயற்கையாகவே அனைவரிடமும் இனிமையாக பழகிடும் சௌந்திரராஜனுக்கு கைராசிக்காரர் என்ற நற்பெயர் கிடைத்தது. 1925 ஆம் ஆண்டு மதுரையை கொள்ளை கொண்ட ப்ளேக் நோய் ஆயிரக்கணக்கானோரை பலி கொண்டதுடன் தொற்று நோயாளிகளுக்கு வைத்தியம் செய்து வந்த சௌந்தரராஜனையும் ப்ளேக் ஆட்கொண்டது. வாழ்வின் இறுதிக் கட்டத்திலிருந்த அவர் அழுது புலம்பிய மனைவியிடம் சௌந்தரம் நீ அழக்கூடாது நீ சாதிக்கப் பிறந்தவள் மனிதர்கள் பிறப்பதும் இறப்பதும் இயற்கையின் விதி. நான் சிறிது நேரத்திற்குள் இறந்து போய்விடுவேன் என தைரியம் சொல்லி இறந்து போனார்.

**காந்தி கிராம் அறக்கட்டளையின் தற்போதைய முன்னேற்றங்கள்:—**

அங்கன்வாடி முதல் பல்கலைக்கழகம் வரை அனைத்து வகையான படிப்புகளும் ஒரு சேர அமைந்துள்ளது. தொடக்கத்தில் 25 ஏக்கராக இருந்த கல்வி நிலையங்கள் தற்பொழுது 500 ஏக்கராக மாறியுள்ளது. இந்த கல்வி நிலையங்கள் மற்றும் பல்கலைக்கழகத்தினால் பெண்களின் படிப்பு விகிதம் அதிகரித்துள்ளது.

உடல்நலம் என்று எடுத்துக்கொண்டால் நோய்களை குணப்படுத்த அலோபதி, ஆயுர்வேதா, சித்தா, இயற்க்கை மூலிகைகள் தயார் செய்யப்படுகிறது. 10க்கு 10அடியில் தொடங்கிய சுகாதார நிலையம் தற்பொழுது 300kp ஆக அதிகரித்துள்ளது.

மறு உற்பத்தியில் அதிக கவனம் செலுத்துகிறது. ஒரு நாளைக்கு 20 பேருக்கு சுகபிரசவம் நடந்து வருகிறது. முன்னெச்சரிக்கை சுகாதார வசதிகளும் உண்டு. உடல் நலன் சுகாதாரத்தை மேம்படுத்தும் வகையில் முதுகலை படிப்பு( PG.Dip... in Health Promotion) 1961ல் ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகிறது. 260 வகையான ஆயுர்வேத மருந்துக்கு – ISO தரச்சான்றுகள் அளிக்கப்பட்டுள்ளது. 2000 குடும்பத்தினர் வேலை செய்கின்றனர், மறைமுகமாக 1500 குடும்பத்தினர் பயனடைகின்றனர்.கிராமத்திற்கு தேவையான பொருட்கள் அனைத்தும் கிராமத்திலேயே உருவாகிறது. காந்தியின் கொள்கையான தன்னிறைவை மேம்படுத்தும் வகையில் கிராம தொழிற்சாலைகள் இயங்குகின்றனர்.
சமூக சேவை என்று எடுத்துக்கொண்டால் 3 மாவட்டங்களில் அதாவது திருநெல்வேலி, தேனி, மதுரை மாவட்டங்களில் சௌபாக்யா இல்லம் ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக இயங்கி வருகிறது.
கிராம அளவில் ஷாம்புகள் விளம்பரமே இல்லாமல் 2 கோடி அளவில் ஒரு மாதத்திற்கு விற்பனை ஆகிறது. மேலும் ஜனாதிபதி மூலம் விருதுகளும் வழங்கப்பட்டுள்ளது. ISO தரச்சான்றுகள் பெற்ற சோப்பும் இங்கு விற்கப்படுகிறது பெண்களின் முன்னேற்றத்திற்க்கும் காரணமாக காந்தி கிராம திகழ்கிறது. கிராம பெண்களை, கிராம பஞ்சாயத்து அளவில் முன்னேற்ற அரசு சாரா நிறுவனங்களை உருவாக்கி அதற்க்கு முதுகெலும்பாக துணை நிற்கின்றனர். இதுவரை 1200 சுய உதவிக் குழுக்களும், 20,000 கூட்டமைப்புகள் 48 குறுந்தொழிலகங்களும் உள்ளன. சுகாதாரத்தை மேம்படுத்தும் வகையில் தீங்கு விளைவிக்காத சானிட்டரி நாப்கின்களையும் உற்பத்தி செய்கின்றனர். 3000 தனித்தொழில் முனைவோரை முன்னேற்றி உள்ளனர். திறமையை வளர்க்கும் பயிற்சிகள் அளிப்பதிலும் இவர்கள் ஈடுபட்டுள்ளனர். காந்தி கிராம் பற்றிய தகவல்கள் பெற்ற பின்னர் சுயஉதவிக்குழுக்கள் பெண்கள் தயாரிக்கும் உற்பத்தி பொருட்களை பார்வையிட சென்றோம்.

### பார்வையிடப்பட்ட இடங்கள்:—

- மாவுமில்
- வத்தல் தயாரிக்கும் இடம்
- அப்பளம் தயாரிக்கும் இடம்
- ஊறுகாய் தயாரிக்கும் இடம்
- மூலிகைகள் (ம) மூலிகை மருந்துகள் தயாரிக்கும் இடம்
- ஆயுர்வேத முறையில் தயாரிக்கப்படும் சோப்புகள் (மற்றும்) ஷாம்புகள் தயாரிக்கும் இடம்
- பழச்சாறு தயாரிக்கும் இடங்கள்
- கட்டில், பீரோ தயாரிக்கும் இடம்
- அச்சு ஆலை
- சாயப்பட்டறை

போன்ற பல இடங்களை பார்வையிட்டு தயாரிக்கும் முறைகளை அறிந்து கொண்டு அன்றைய களப்பணி நிறைவு பெற்றது.

பங்கேற்பாளர்கள் விருப்பத்தின் பெயரில் மதுரை மீனாட்சி அம்மன் கோவில், காந்தி மியூசியம் அழைத்து செல்லப்பட்டனர். மேலும் பங்கேற்பாளர்களின் தேவைக்கேற்ப ஷாப்பிங் செய்து மகிழ்ந்தனர்.

## கலைத்திறன்கள் மூலம் பெண்களின் உரிமைகளை முன்னெடுத்துச் செல்வதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் யுத்திகள்

**திருமிகு.மங்கை**

திருமிகு.மங்கை அவர்களால் நடத்தப்பட்ட இவ்வமர்வு இசை, வீதிநாடகம், ஓரங்க நாடகம் மற்றும் ஆவணப்படங்கள் மூலம் பெண்களின் உரிமைகளை வலியுறுத்துவது மற்றும் பெண் உரிமை போராட்டங்களை முன்னெடுத்துச் செல்வது குறித்து பங்கேற்பாளர்களுக்கு கற்பிக்கும் விதமாகும் அவர்களின் கலைத்திறன்களை வெளிகொண்டு வரும் விதமாக அமைந்தது.

அமர்வின் துவக்கத்தில் அஃறிணைகள் என்ற மூன்றாம் பாலினத்தவர்கள் தொடர்பான ஆவணப்படம் காட்டப்பட்டது. இதில் திருநங்கைகள் பெறும் துன்பங்களும், பிரச்சனைகளும் சமூகத்தால் அவர்கள் ஒடுக்கப்படுகிற விஷயமும் பல தடைகளை தாண்டி வெற்றி கண்டு வாழ்க்கையில் முன்னேற்றம் அடைந்து வாழ்வதை பற்றியும் மிக தெளிவாக குறுகிய கால நேரத்தில் சுருங்க கூறி கருத்துக்கள் அனைவர் மனதிலும் தெளிவாக பதிந்தது.

இதன் பின்னர் பயிற்சியாளர் அனைவரையும் ஒன்று கூடி வட்டமாக நிற்கும்படி கூறினார். ஒன்று கூடிய பிறகு அமரச் செய்து மூச்சுப்பயிற்சியை மேற்கொண்டார். இதன் மூலம் மனதை ஒருநிலைக்கு கொண்டு வருவதற்கும், மூளைக்கு இரத்த ஓட்டம் சீராக செல்வதற்கும் பயனுள்ளதாக இருந்தது.

தப்பு அடித்தலை குல தொழிலாக கொண்ட திருமிகு. மணிகண்டன் அவர்கள் பயிற்சிக்கு பயிற்றுநராக வந்திருந்தார். அவர் தமிழில் முதுகலை பட்டப்படிப்பை முடித்து, நாட்டுப்புறவியலில் தப்பட்டம் குறித்த ஒரு ஆராய்ச்சியை மேற்கொண்டுள்ளார். மேலும் தனது தப்பட்டக்கலையின் மூலமாக மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் சேவையிலும் ஈடுபட்டுள்ளார். பயிற்சியாளராக திருமிகு.சாரதி அவர்களும் வருகை புரிந்திருந்தார். அவரும் தமிழில் முதுகலை படிப்பை முடித்து, கிராமிய நாட்டுப்புற பாடல்களில் முனைவர் பட்டம் பெற தற்பொழுது ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளார். கிராமிய பாடல் கவிதைகள் இயற்றுவதில் வல்லவர்.

மூச்சுப்பயிற்சிக்கு பின் அனைவரும் எழுந்து வட்டமாக இருக்கும் படி பயிற்சியாளர் சாரதி அவர்கள் கூறினார். பின்னர் மூன்று விதமான தாளக்கட்டுகளை எளிமையான முறையில் கற்றுக்கொடுத்தார். **ராகம்**:— ஆ..ஆ..அ என்ற உச்சரிப்பை அடிவயிற்றில் இருந்தும் நெஞ்சில் இருந்தும் தொண்டையில் இருந்தும் குரல் மூலமாக ராகங்களாக வெளிக்கொணரும் படி கற்றுக் கொடுத்தார்.

பின்னர் திருமிகு.மணிகண்டன் அவர்களால் தப்பாட்டம் கற்றுக்கொடுக்கப்பட்டது. நான்கு விதமான தாளங்கள் போட்டு அதற்கு ஏற்ற நடனம் கற்றுக்கொடுக்கப்பட்டு அனைவராலும் ஆடப்பட்டது.

**நடனம்:—**

முதலில் வட்டமாக அனைவரும் நின்று பலி சொல் கூறுவது போல கைகளை வீசி வலப்புறமும் இடப்புறமும் மாற்றி மாற்றி வீசி ஆடினர்.

இரண்டாவதாக நின்று வலது காலை ஒரு அடி முன் வைத்து பாதம் முழுவதும் தரையில் படும்படி செய்து பின் அந்த காலை பின்நிறுத்தி கட்டைவிரலை மட்டும் ஊற்றி நின்றனர்.

மூன்றாவதாக காலை ஒரு சேர நிறுத்தி நின்று, வலது காலை ஒரு அடி பக்கவாட்டில் எடுத்து வைத்து பின்னர் சேர்த்து நின்று லேசாக முட்டியை மடக்கி நின்ற பிறகு இடது காலை ஒரு அடி பக்கவாட்டில் எடுத்து வைத்து பின் சேர்த்து நின்றனர்.

நான்காவது கைகளை வளைத்து வீசி கால்களை வலப்புறத்தில் இருந்து இடப்புறமாகவும், இடப்புறத்தில் இருந்து வலப்புறமாகவும் மாற்றி வீசி வேகமாக தாளத்திற்கு ஏற்றது போல் அனைவரும் நன்றாக ஆடினர்.

**விளையாட்டு: —**

நடனத்திற்கு பின்னர் விளையாட்டு ஒன்று விளையாடப்பட்டது. விளையாட்டு களத்தின் முடிவு கோட்டில் 1,2,3 சிலை என்று கூறும் பயிற்றுநர் நிற்பார். போட்டியாளர்களாக பங்கேற்பாளர்கள் விளையாட்டு களத்தின் தொடக்க கோட்டில் நிற்பர். பயிற்றுநர் 1,2,3 சிலை (Statue) என்று கூறுவர் பங்கேற்பாளர்கள் தாங்கள் நின்ற கோட்டிலிருந்து முன்னேறி முடிவு கோட்டை அடைய வேண்டும். சிலை என்று சொல்லும் போது அசையாமல் சிலை போல் நிற்க வேண்டும். அசையும் பங்கேற்பாளர் தான் நின்ற இடத்திலிருந்து பின் நோக்கி செல்ல வேண்டும். இந்த விளையாட்டில் வெற்றியை அடைய வேண்டுமானால் தொடக்க கோட்டில் நிற்க்கும் போட்டியாளர், கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறி நடந்து அல்லது ஓடி முடிவு கோட்டில் நிற்பவரை தொட வேண்டும். ஆனால் அவர் 1,2,3 சிலை என்று கூறி திரும்பி பார்க்கும் போது போட்டியாளர்கள் எந்த நிலையில் நின்றாலும் அசையாமல் நிற்க வேண்டும். அப்பொழுது அசைந்து விட்டால் அவர் மறுபடி தொடக்க கோட்டில் நின்று விளையாட்டை மறுபடி தொடரவேண்டும். இவ்வாறு பங்கேற்பாளர்கள் அனைவரும் ஆர்வமாக விளையாட்டில் ஈடுபட்டு வெற்றி கண்டனர்.

சிறிது நேரம் கழித்து பங்கேற்பாளர்களை மூன்று குழுக்களாக பிரித்தனர். பிரிக்கப்பட்ட பின்னர் ஒரு ஆழமான கருத்தை பாட்டின் மூலமாகவும், நடனம் வாயிலாகவும் வெளிப்படுத்த வேண்டும் என்று கூறப்பட்டு அதற்கு உதவியாக திருமிகு.மணிகண்டன், திருமிகு.சாரதி, திருமிகு.மங்கை அவர்கள் இருந்தனர். குழு விவாதத்தின் மூலம் மூன்று குழுக்களும், மூன்று விதமான தலைப்புகளில் தங்களது கருத்தை முன் வைத்தனர்.

**குழு 1 :— நான் நானாக இருப்பதற்கு வழி பிறக்க வேண்டும்**

**பாடல்கள்:**

முகவரி தேடும் வினாக்களுக்கு
விடை கிடைக்க வேண்டும் — ஆமாம்
விடை கிடைக்க வேண்டும்..
காணாமல் போனோரை தேடி அலையும்
வாழ்க்கை முடிய வேண்டும் — ஆமாம்
வாழ்க்கை முடிய வேண்டும் .. **(முகவரி தேடும்..)**

பெண்கள் மீதான வன்முறைகள் அழிய வேண்டும்
கைதிகளாக இருப்பவர்களுக்கு நீதியும், விடுதலையும் கிடைக்கவேண்டும்
ஆண் பெண் சரிவிகிதம் வாழ்வில் சமமடைய வேண்டும்
தனித்துவாழும் மனத்துணிவும் சுதந்திரமும் வேண்டும்..**( முகவரி தேடும்..)**

என்னை நான் புரிவதற்க்கும்
நான் நானாக இருப்பதற்க்கும்
வழி பிறக்க வேண்டும் — ஆமாம்
வழி பிறக்க வேண்டும்..**( முகவரி தேடும்..)**

## குழு- 2 (பெண்களின் அவலநிலை)

**பாடல்**

கவிதை ஒன்று எழுத எண்ணியே
நாங்கள் கற்பனையில் மூழ்கி நின்றோம்
கவிதை ஒன்றும் தோன்றவில்லை — ஆனால்
கண்ணீர் தான் பிறந்ததம்மா..

**வசனம்**

கண்ணீர் தோன்றியதன் காரணத்தைக் கூறுகிறேன் கேட்டீரோ ()
யுத்தம், சத்தம், இரத்தம் — இதில்
அழிந்தது மனிதன் மட்டுமல்ல மனிதத்துவமும் கூட

**பாடல்**

பெண்ணாய் பிறந்தோம், பெரும் பழி செய்தோம்
பிழை ஏதும் எம்மிலில்லை..
மண்ணில் தினமும் மரணம் மரணம்
மகிழ்வேதும் எமக்கில்லை..

**வசனம்**

அப்பா, அம்மா என்று சொல்லிதவிக்கும் குழந்தைகளோ எத்தனை, எத்தனை
கை இழந்து, கால் இழந்து, கண் இழந்து கணவனையும் தானிழந்து
பரிதவிக்கும் அவலமோ எத்தனை எத்தனை

**பாடல்**

ஆழ்வது ஆணிமை
அடிமை பெண்ணினம்
அல்லல்படுகின்றோம்
தேய்ந்து வாழ்ந்து, தினம் தினம் சாவு
சிதறி அலைகின்றோம் — நாங்கள்
சிதறி அலைகின்றோம் (கவிதை ஒன்று ..)

## குழு– 3 (பெண்களின் பங்கேற்பு நிலை)

—முனியம்மா சமத்துவம் என்னும் விளம்பரத்தை பார்த்து தானும் படிக்க ஆசைப்பட்டால்..
புத்தக பையோடு பாடசாலைக்கு போனால்.. ஆனால்
Head – Master- சொன்னாரு
உனக்கேன் அம்மா படிப்புனு

— அழகம்மா பெரியதொரு நிறுவனம் ஒன்றில் வேலை செய்ய ஆசைப்பட்டால்
பற்பல திறமைகளுடன் தேர்வுக்காக
அழகாய் உடை உடுத்தி போனால்.. ஆனால் ஐயோ அம்மா
உனக்கு இந்த வேலை பொருத்தமில்லை
— தங்கம்மா பாராளுமன்றம் போனபோது தலையை தலையை ஆட்டும் பொம்மையானால்..
“தங்கம்மா எங்கம்மா சமத்துவம்”
என பங்கேற்பாளர்கள் தங்கள் கலைத்திறன்களை வெளிப்படுத்த பயிற்சியாளர்கள் பயிற்சியளித்தனர்.
பங்கேற்பாளர்கள் தாங்கள் கற்றுக் கொண்ட கலைத்திறன்களை மறுநாள் நடைபெறும் மகளிர் தின விழாவில் கலைநிகழ்ச்சி நடத்த ஒத்திகை நடத்தினர்.
பங்கேற்பாளர்கள் அனைவரும் அன்று மாலை மதுரை கல்லூரியில் மரப்பாச்சி குழுவினரால் நடிக்கப்பட்டு அரங்கேற்றப்பட்ட “ஆண்மையோ ஆண்மை” என்ற அரசியல் ஓரங்க நாடகம் பார்க்க அழைத்து செல்லப்பட்டனர். இந்நாடகம் திருமிகு. மங்கை மற்றும் திருமிகு. கீதா அவர்களினால் இயக்கப்பட்டது.

## தெற்காசிய அளவிலான வலையமைப்பு உருவாக்குவதன் அவசியம்
## திருமிகு.கமலாபாசின் (சங்கத்)

திருமிகு.கமலாபாசின் அவர்கள் பங்கேற்பாளர்களின் அறிமுகத்திற்கு பின் சங்கத் மற்றும் ஏக்தா இணைந்து நடத்தும் பாலியல் மற்றும் மேம்பாடு குறித்த பயிற்சியை பற்றி சில தகவல்கள் அளித்தார். தற்பொழுது நடந்து வரும் பயிற்சி ஐந்தாவது முறையாக தமிழ்நாட்டில் நடைபெறுகிறது என்றும், இதுவரை 150 பெண்கள் இலங்கை மற்றும் தமிழ்நாட்டில் இருந்து பங்கு பெற்று பயனடைந்தது தனக்கு பெரும் மகிழ்ச்சி அளிப்பதாகவும் கூறினார். முதல் இரண்டு பயிற்சி சென்னையில் IWID நிறுவனத்தில் நடத்தப்பட்டது என்றும், அடுத்து மூன்று பயிற்சிகள் ஏக்தாவில் ஒருங்கிணைக்கப்பட்டு நடைபெற்று வருகிறது என்ற தகவல்களையும் அளித்தார்.

சங்கத் நிறுவனத்தின் சார்பில் பெண்ணிய கருத்துக்கள் பொறிக்கப்பட்ட பையும் சால்வையும் திருமிகு.கமலாபாசின் அவர்களால் பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் அணிவித்து கௌரவிக்கப்பட்டனர். பின்னர் அனைவரும் ஒன்று சேர்ந்து வட்டமாக நின்று பின்வரும் கோஷங்களை எழுப்பினர். திருமிகு.கமலா பாசின் அவர்களால் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் பற்றிய கோஷங்கள்

1. பெண்களுக்கு எதிரான வன்முறை
2. பாலியல் பலாத்காரம்
3. வரதட்சணை கொடுமை

இதுபோன்று பெண்களுக்கெதிரான வன்முறைகளை இந்தியில் கூற பங்கேற்பாளர்கள் அனைவரும் “ஆசாதி” என்ற கோசங்களை எழுப்பினோம். ஆசாதி என்ற சொல்லுக்கு சுதந்திரம் என்று அர்த்தமாகும்.இதன் பின்னர் தமிழ் பாடல் ஒன்று பாடப்பட்டது.

வேண்டாம் வேண்டாம் வேண்டாம்
சந்தேகம் வேண்டாம்
வேண்டும் வேண்டும் வேண்டும் சந்தோஷம் வேண்டும்
வேண்டாம் வேண்டாம் வேண்டாம்
வன்முறை வேண்டாம்
வேண்டும் வேண்டும் வேண்டும்
சமத்துவம் வேண்டும்

எனப்பாடலை பங்கேற்பாளர்கள் அனைவரும் இணைந்து பாடினர். இதனைத் தொடர்ந்து மார்ச் 8 மகளிர் தினம் உருவான விதம் பற்றி விளக்க உரை அளிக்கப்பட்டது. 19 ஆம் நூற்றாண்டில் தொழிற்புரட்சிக்கு பிறகு பெருவாரியான பெண்கள் தொழிற்சாலைகளில் வேலை பார்த்தனர். வேலை நேரம் 16 மணி. ஒருவர் மூச்சுக்காற்றை மற்றொருவர் சுவாசிக்கும்படியான குறுகிய இடங்களில் வேலை. கழிவறை, ஓய்வறை, போன்ற வசதிகள் கிடையாது. இந்நிலைமையை மாற்ற உலகின் வெவ்வேறு பகுதிகளில் பெண்கள் அவ்வப்போது போராட துவங்கினார்கள்.1830க்கும், 1840க்கும் இடைப்பட்ட காலத்தில் அமெரிக்காவில் சலவை, தையல், அச்சுதொழில் போன்ற பல்வேறு துறையைச் சேர்ந்த பெண்களும் வேலை நேரம், சுகாதார சூழல், ஊதியம் போன்ற காரணங்களுக்காக தொடர்ந்து போராடினார்கள். இதனால் 1847-ல் வேலைநேரம் 10 மணிநேரமாக குறைக்கப்பட்டது.

1857 மார்ச் 8 நெசவுத்தொழில் மற்றும் உடை தயாரிப்பில் வேலை பார்த்து வந்து நூற்றுக்கணக்கான பெண்கள் நியூயார்க் நகர வீதிகளில் இறங்கிப் போராடினார்கள். இதே தொழிற்சாலையில் பெண்கள் திரும்பவும் 1909-ல் பழைய கோரிக்கைகளை முன்வைத்து போராடத் தொடங்கினார்கள். 30,000 பெண்கள் தொடர்ந்து 13 வாரம் போராடினார்கள். சங்கம் அமைத்தார்கள், கைதாகி சிறை சென்றார்கள். சங்கத்தின் மூலம் பணம் திரட்டி வெளியில் வந்தார்கள். போராட்டம் தொடர்ந்தது

வெற்றியும் கிடைத்தது. வேலை நேரம் 8 மணியாக குறைக்கப்பட்டது. ஊதியமும் உயர்ந்தது. யூனியன் அமைப்பதற்கான சுதந்திரமும் அங்கிகரிக்கப்பட்டது.
ஐரோப்பாவில் 1871ல், டென்மாக் நகரில் யுத்தத்திற்கெதிராக பெண்கள் மாநாடு நடத்தினார்கள். 1905 லிருந்து 1907வரை ரஷ்யாவில் நடந்த வேலை நிறுத்தங்களில் பல்லாயிரக்கணக்கான பெண்கள் கலந்து கொண்டனர். ரோசா லக்சம்பர்க், கிளாரா ஜெட்கின் போன்றவர்கள் புரட்சிக்கான போராட்டங்களில் சிறு குழுக்கள் மட்டுமே ஈடுபடுவதை தவிர பெருவாரியான மக்களின் பங்கேற்பையும் வலியுறுத்தினார்கள். கிளாரா ஜெட்சினின் முயற்சியில் 1907ல் சர்வதேச சோஷலிசப் பெண்களின் முதல் மாநாடு நடந்தது.

1910ல் கோபன் கேனில் சோஷலிசப் பெண்களின் இரண்டாவது சர்வதேச மாநாடு கூட்டப்பட்டது. உழைக்கும் பெண்கள் தினமொன்றை அமல்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இதற்கு முந்தைய வருஷம் தான் மார்ச் 8ல் நியூயார்க் நகரத்தில் 30,000 பெண்கள் வேலைநிறுத்தம் செய்தனர். மார்ச்8-ம் தேதியை பெண்கள் தினமாக அறிவிக்கலாமே என்ற கிளாரா ஜெட்கின் யோசனை ஏற்றுக் கொள்ளப்பட்டது. மார்ச் 8-ல் அகில உலக உழைக்கும் மகளிர் தினமாயிற்று. அடுத்த ஆண்டு மார்ச் 8 தேதியை ஒட்டி நடந்த ஊர்வலத்தில் 10 லட்சத்திற்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்டனர். இந்த ஊர்வலம் நடத்த ஒரே வாரத்தில் நியூயார்க் நகரத்தில் ஏற்பட்ட ஒரு கோர தீ விபத்து நடந்தது. 140 உழைக்கும் பெண்கள் தீயில் கருகினர். அமெரிக்காவின் தொழிற்சட்டங்களை சீரமைப்பதில் இந்த சம்பவம் ஒரு முக்கிய பாதிப்பை ஏற்படுத்தியது.

1945-க்கும் பிறகு தான் மார்ச் 8-ம் தேதியை ஐ.நா சபையும் "பெண்கள் தினமாக" ஏற்றது. அதன் பிறகே பெண்கள் தினம் உலகமெங்கும் அனுசரிக்கப்படுகிறது. பெண்கள் தினம் உருவாகுவதற்கு பணகார வர்க்க பெண்களோ நடுத்தர வர்க்க பெண்களோ முக்கிய காரணம் அல்ல. அநீதியை எதிர்த்து குரல் கொடுத்த உழைக்கும் வர்க்க பெண்களே காரணம் என்றும் திருமிகு. கமலா பாசின் அவர்கள் கூறினார்.

திருமிகு. கமலாபாசின் அவர்கள் பெண்களுக்காக 34 வருடங்களாக குரல் கொடுத்து வருவதாகவும், குறிப்பாக தமிழகம் இலங்கை பெண்களிடம் கலந்துரையாடி நட்பை வளர்த்து கொண்டதன் மூலமாகவும் பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பான தொடர்ந்து குரல் கொடுப்பதற்க்கு உறுதுணையாக உள்ளது என்று தனது அனுபவத்தை கூறினார். மேலும் ஒரு பெண்ணிய வாதி என்றால் எப்படி இருக்க வேண்டும் என்று திருமிகு.கமலாபாசின் அவர்கள் கூறினார். தன்னுடைய பெயர் நான் இந்த வேலை செய்கிறேன் என்று சுய அறிமுகம் ஆக கூடாது. எதற்காகவும் யாரிடமும் சண்டையிடக் கூடாது. ஆடம்பரமாக உடைகள் அணிய கூடாது, ஆடம்பரத்தை தன் செயலிலும் காட்டகூடாது. மற்றவர்களுக்கு உதாரணமாக திகழ வேண்டும் என்று கூறினார். பெண்ணிய இயக்கங்கள் மூலம் அனைத்து இடங்களிலும் தொடர்பு இருப்பதால் நான் உலகத்தின் எந்த இடங்களுக்கு சென்றாலும் எனக்கு நண்பர்கள் உள்ளனர். அவர்களது வீட்டை என் வீடாக பார்க்கிறேன். நாம் மக்களுக்காக வேலைபார்க்கிறோம் என்ற எண்ணத்துடன் வாழ வேண்டும். ஒரு பெண்ணியவாதி என்றால் இப்படி தான் இருக்க வேண்டும் என்று கூறினார். பெண்கள் தொடர்பான வன்முறைகள் பற்றி குழுவாக இயங்குவதற்கு நாம் தினமும் சந்திக்கும் சமநிலை அற்ற விஷயங்கள் அதாவது சாதி, இனம், மதம் போன்றவை இடையுறாக அமைந்தது எனவும், 1978- களில் தான் எழுதிய பாடல் மூலம் வெளிபடுவது யாதெனில் பெண்கள் தடைகளை தாண்டி வரவேண்டும் புத்தாக்க சிந்ததனையாளராகவும் சமாதானத்தை ஏற்படுத்துதல் போன்ற விஷயங்கள் அப்பாடலில் உள்ளடக்கமாகும் என்று கூறினார். குடும்ப வன்முறை, வாக்குரிமை பற்றிய கருத்துக்களை முன்வைத்தார்.
1960 நவம்பர் 25அன்று சர்வாதிகாரியினால் கொடுரமாக கொலை செய்யப்பட்ட சகோதரிகளுக்காக அவற்றை நினைவு கூறும் முகமாக நவம்பர் 25ம் தேதி அன்று சர்வதேச பெண்கள் மீதான

வன்முறை எதிர்ப்பு தினமாக பெண் செயற்பாட்டாளர்கள் அறிவித்தனர். 1999ல் ஐநா சபையும் இந்நாளை சர்வதேச பெண்கள் மீதான வன்முறை தினமாக உலகிற்கு அறிவித்தாக கூறினார்.

இத்தகைய சூழ்நிலையில் பெண்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் வகையில் பெண்களின் கூட்டமைப்பினை ஏற்படுத்த வேண்டும். பெண்கள் மீதான அனைத்து வகையான பாகுபாடுகள் மற்றம் வன்முறைகளை ஓழிப்பதற்காக நாம் ஒன்றிணைந்து ஒரு வலைப்பின்னலை, கூட்டமைப்பை உருவாக்க வேண்டும். சமத்துவம், வளர்ச்சி, அமைதி இவை மூன்றும் நம்முடைய நோக்கமாக இருக்க வேண்டும் என்று கூறினார். இதன் பிறகு டெல்லியில் சங்கத் நடத்தும் ஒரு மாத பயிற்சி பற்றியும் அங்கு நடக்கும் நிகழ்வுகள் பற்றியும் விளக்கி கூறினார்.

— இந்த பயிற்சி ஒரு மாத கால அளவில் நடைபெறும்.
— தெற்காசிய அளவில் பல்வேறு நாட்டை சேர்ந்தவர்கள் பங்கேற்பார்கள்.
— இருக்கைகள் கிடையாது, பங்கேற்பாளர்கள் அனைவரும் சமமாக, வட்டமான முறையில் தரையில் அமர வேண்டும்.
— மருத்துவ வசதிகள் உண்டு.
— தினமும் காலை 6.30 மணி அளவில் யோகா பயிற்சியுடன் தொடங்கும்
— இரவு ஆவணப்படங்கள் காண்பிக்கப்படும். மேலும் நடனங்களும் இடம் பெறும்
— குறிப்பாக பயிற்சி 6.30 a.m முதல் 10.30p.m வரை நடைபெறும்.
— ஆடைகள் அவர்களது விருப்பம் போல் அணிந்து கொள்ளலாம்
— பயிற்சியில் அதிகளவில் ஆடல், பாடல்கள் இடம் பெறும். குறிப்பாக 18 பாடல்களாவது முழுமையாக அறிந்து பாடும் திறமையோடு வெளியேறுவது கட்டாயமாகும். பிறமொழி பாடல்களும் இடம் பெறும்.
— தேநீர் இடைவேளையில் நடனமிட்டு கொண்டு தேநீர் அருந்த ஏற்பாடு இருக்கும்.
— வாரத்திற்க்கு ஒரு முறை தங்கும் அறையை மாற்றி அமைப்பர். ஒரே மொழி, இனம், நாடு, மதம் உடையவர்களை ஒன்றாக தங்க விடமாட்டார்கள். ஏனென்றால் பிறமொழியினர், பிற நாட்டினருடன் பழகும் போது தான் தகவல்கள் பரிமாறி கொள்ள முடியும் என்றும், பிற மொழிகளையும் கற்றுக்கொள்ளலாம் என்றும் கூறினர்.
— பயிற்சியை பற்றின அறிக்கையை பங்கேற்பாளர்களே தயாரிக்க வேண்டும்
— மூன்று மொழிகளில் நடத்தப்படும் இந்த பயிற்சி ஒரே வகையான முறைகளிலேயே பயிற்சி நடத்தப்படும்.
— Poster, Banner களில் உறுதியான ஒரு செய்தியை பதிவு செய்வது முக்கியம் என்று கூறப்பட்டது
— E-Group வலைத்தளம் உருவாக்க வேண்டும் பயிற்சி பெறுபவர்கள் அனைவரும் ஒரு E-Group-I தயாரிப்பதன் மூலம் தகவல்கள் அனைவரையும் சென்றடையும் என்றார். எடுத்துக்காட்டாக: Tamil Course 2012 E-Group
— தெளிவாக விரைவில் புரிந்து கொள்ளும் வகையில் ஆங்கிலத்தில் புத்தகங்கள் உள்ளன என்றார்.

இத்துடன் திருமிகு. கமலா பாசின் அவர்களின் அமர்வு நிறைவு பெற்றது. அதன் பின்னர் மாலை 4 மணி அளவில் மகளிர் தினவிழா அனுசரிக்கப்பட்டது.

பங்கேற்பாளர்களே நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொண்டு செய்தனர். வரவேற்பாளர்களை வரவேற்பதிலும், நிகழ்ச்சி நடக்கும் அறையை அலங்கரிக்கும் வேலைகளிலும் பெண்கள் தினம் என்று எழுதப்பட்ட பேடஜ்களை தயாரித்து அவற்றை பங்கேற்பாளர்க்கு கொடுக்கும் பணியிலும் நவதானியங்களில் கோலம் போட்டு அலங்கரிக்கும் பணியிலும் பங்கேற்பாளர் இணைந்து சிறப்பாக செயல்பட்டு நிகழ்ச்சியை தொடங்கினர். பங்கேற்பாளர்களில் ஒருவரான திருமிகு.பூங்கோதை அவர்கள் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். வரவேற்பாளர்கள் அனைவரையும் திருமிகு.சேதீஸ்வரி அவர்கள் வரவேற்றனர். பின் திருமிகு.கமலாபாசின் அவர்களை

சிறப்புரையாற்றினார். மகளிர்தினம் உருவாக காரணமாக இருந்த உழைக்கும் வர்க்க பெண்கள் பற்றி கருத்துக்களையும், சங்கத் அமைப்பின் செயல்பாடுகள் மற்றும் பயிற்சிகள் பற்றின தகவல்களையும், பெண்ணியவாதிகள் குறித்தும் பகிர்ந்து கொண்டனர். திருமிகு. கமலாபாசின் அவர்களின் ஆங்கில சிறப்புரையை திருமிகு. காந்திமதி அவர்கள் மொழியாக்கம் செய்தார். அதன் பின்னர் பெண்கள் தினத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த தலைப்பு

**'From the peace home, to the peace in the world"**

**Let us Challence millitrism & end violence against women"**

என்பதை பற்றின விளக்கத்தை சுருக்கமாகவும் தெளிவாகவும் திருமிகு. பிம்லா சந்திரசேகர்கள் அவர்கள் கூறினார். பின்னர் திருமிகு. வாணி ரவீந்தரன் அவர்களால் எழுதப்பட்ட "அம்மா" என்ற கவிதை வாசிக்கப்பட்டது. மேலும் பங்கேற்பாளர்கள் அனைவரும் பயிற்சியில் தாங்கள் கற்றுக்கொண்ட கலைத்திறன்களை வெளிப்படுத்தும் பேச்சு, பாடல்கள் இடம் பெற்றது. நிகழ்ச்சியின் இறுதியில் அனைவரும் ஒன்று கூடி மெழுகுவர்த்தியை கையில் ஏந்தி கொண்டு கீழ்கண்ட பாடலை பாடினர்

We Shall Over Come

We Shall Over Come

We Shall Over Come Some Day..

Deep in my heart I do believe

We shall over come someday

We are not alone

We are not alone

We are not alone some day

Deep in my heart I do believe

We shall overcome some day

இந்த பாடலை தமிழிலும், இந்தியிலும், ஆங்கிலத்திலும் ஒன்று கூடி பாடப்பட்டது. பின்னர் வன்முறைக்கு எதிரான கோஷங்கள் எழுப்பியும் அனைவரும் மகளிர் தின வாழ்த்துக்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொண்டனர். மகளிர் தின விழாவும் பயிற்சியும் சிறப்பாக நிறைவுற்றது.

# இராணுவமயமாக்கல் எல்லை பகுதிகளிலும், போர் நடைபெறும் பகுதிகளிலும் பெண்கள் சந்திக்கும் சவால்கள் மற்றும் வன்முறைகள்

## திருமிகு. பாண்டிமாதேவி

இராணுவமயமாதலால் பெண்கள் சந்திக்கும் சவால்கள் (ம) வன்முறைகள் பற்றி இலங்கை சம்பவத்தை திருமிகு.பாண்டி தேவி அவர்கள் எடுத்துக்காட்டாக இலங்கையை வைத்து கூறினார்.

இலங்கையில் தமிழ் விடுதலை புலிகளுக்கும், சிங்கள இராணுவத்திற்கும் இடையே நடந்த பிரச்சனையில் பெண்கள் சந்தித்த வன்முறைகள்

* பாலியல் வன்கொடுமை
* இடம் பெயர்வு
* வீட்டில் குடும்பத்தலைவர் இறந்து இருந்தாலோ, மனைவியை விட்டு பிரிந்து சென்று இருந்தாலோ காணாமல் போயிருந்தாலோ அதனால் அதிகபட்சம் பாதிக்கப்படுவது பெண்கள் தான்.
* இராணுவத்தினரால் தமிழர்கள் இடம் நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு கொண்ட நிலையிலும் குடும்ப சூழ்நிலை காரணமாகவும் சில பெண்கள் பாலியல் தொழிலில் ஈடுபடுகின்றன.
* பெண்கள் தலைமைப்பொறுப்பை ஏற்று குடும்பத்தை நடத்தி வருகின்றனர்.
* அங்கங்கு இராணுவ மையங்கள் அமைக்கப்பட்டு உள்ளதால் மக்கள் ஒரு பொருளை வாங்க வேண்டும் என்றாலோ விற்க வேண்டும் என்றாலோ ராணுவத்தினரிடம் தான் அணுக வேண்டும். இந்த சூழ்நிலையில் தொடர்ந்து ராணுவ மையத்திற்க்கு போகும் போது சில பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கம் உள்ளாக்கப்படுகிறார்கள். இதனால் இராணுவ மையத்திற்கு ஒரு பெண் அடிக்கடி சென்றால் சமூகம் அவளை தவறான கண்னோட்டத்தில் பார்க்கும் சூழ்நிலை உருவாகியுள்ளது என்ற கருத்தும் முன் வைக்கப்பட்டது.

**அரசியல் அடையாளம்:—**

அரசியல் அடையாளம் என்றால் அதற்கு எடுத்துக்காட்டாக ஒரு பங்கேற்பாளரிடம் நீங்கள் யார் என்று கேட்டார்? அதற்கு பங்கேற்பாளர் நான் ஒரு பெண். இந்தியாவில் தமிழ்நாட்டை சேர்ந்தவர் என்றார். மற்றொரு பங்கேற்பாளர் நான் இலங்கையை சேர்ந்த பெண் என்றார். இதுதான் அரசியல் அடையாளம் என்றார் பயிற்சியாளர். சாதி, மதம், இனம், மொழி, நாடு என்று பல வகையில் அரசியல் அடையாளங்கள் சமூகத்தில் உள்ளன என்று விளக்கப்படுத்தினார்.

மற்றொரு எடுத்துக்காட்டாக: — உயர் மட்டத்தில் இருப்பவர் ஒரு பெண்ணை பாலியல் வன்கொடுமை செய்தால் அந்த பிரபல நபரை பற்றிய புகைபடமோ, செய்தியோ, வெளிவருவதில்லை. ஆனால் பாதிக்கப்பட்ட பெண்ணின் முழு விபரம், புகைப்படமும் செய்தியில் வெளியாகும். ஊடகங்கள் அனைத்தும் இலாப நோக்கை அடிப்படையாக கொண்டே செயல்படுகிறது என்றும் கூறினார். பின்னர் பயிற்சியாளர் இலங்கை வன்முறைபற்றி பேசினார். இலங்கையில் உள்ளவர்கள் தங்களுக்கு நடந்த விஷயத்தை பகிர்ந்து கொண்டனர்.

இதன் பின்னர் இராணுவமயமாதலினால் பெண்கள் சந்திக்கும் சவால்கள், பிரச்சனைகள், வன்முறைகள் அதிகம். இத்தகைய சூழ்நிலையில் அமைதியான சூழல் என்றால் எப்படி இருக்க வேண்டும் என்று குழுவிவாதம் நடத்தப்பட்டது. அதன் மூலம் வந்த கருத்துக்கள் பின்வருமாறு

— பிரச்சனைப் பற்றி குடும்பத்திலுள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் மற்றவர்களுடன் பேசவேண்டும். அதற்கான அங்கீகாரம் இருக்கவேண்டும்

- ஜீவனாம்சத்திற்கான வழிவகைகளை பெற்றுத்தரவேண்டும்
- விழிப்புணர்வு கொடுக்கவேண்டும்.
- பாதிக்கப்பட்ட பெண்ணோடு வேலை செய்தல் அவசியம்
  - உணவில் தன்னிறைவு அடையவேண்டும்
  - ஒன்றுபட்ட இயக்கங்களுடன் சேர்ந்து போராட வேண்டும்
  - CEDAW உடன்படிக்கையினை மறுபரிசீலனை செய்யவேண்டும்

பயிற்சி குறித்து பங்கேற்பாளர்களின் கருத்துக்கள் அனைவர் முன்னிலையிலும் பகிரப்பட்டு காலை பயிற்சி நிறைவு பெற்றது.

# அன்றாட வாழ்வில் பெண்கள் சந்திக்கும் முரண்பாடுகள் அவற்றை எதிர் கொள்வதற்க்கு துணைபுரியும் ஆதரவு அமைப்புகள்

## திருமிகு. சாந்தி சிவநேசன்

பயிற்சியின் தொடக்கம் கருத்து விளையாட்டுகளுடன் தொடங்கியது. விளையாட்டு
முதல் விளையாட்டு: இரண்டு வரிசையாக பெண்கள் நின்றனர். முதல் பெண் கடைசியில் நிற்கும் பெண்ணின் கால் இடையில் நுழைந்து மெல்ல மெல்ல மற்ற பெண்களின் கால் இடையில் நுழைந்து மீண்டும் தன் இடத்தைத அடைய வேண்டும். இப்படியாக ஒவ்வொருவரும் நுழைந்து சென்று அவர்கள் இடத்தை அடைய வேண்டும். எந்த வரிசை முதலில் முடிக்கிறதோ அது வெற்றி பெற்ற அணியாக கருதப்பட்டது.

**விளையாட்டின் மூலம் வெளிவந்தவைகள்:**
கால்களை எவ்வளவு அகற்றி நிற்க முடியுமோ அவ்வளவுக்கு அகற்றி நின்று, தன் அணி வெற்ற பெற வேண்டும் என்ற எண்ணத்தில் செயல்பட்டனர். அந்த நேரத்தில் நாம் ஆணா பெண்ணா என்று யாரும் யோசிக்கவில்லை.

குண்டாக இருந்த பெண்கள் தான் குண்டாக உள்ளோம் நம்மால் விளையாட முடியாது, வெற்றி பெற முடியாது என நினைக்கவில்லை

சில பெண்கள் போர்பகுதியில் போர் வீரர்கள் நுழைந்து செல்வது போல் சென்றனர். சிலர் தவழ்ந்து சென்றனர்

நம் இலக்காக என்ன நினைத்தமோ, அதை அடைய தடையாக நாம் எதையும் நினைக்க கூடாது என்ற கருத்தை இவ்விளையாட்டு வெளிப்படுத்தியது.

**இரண்டாம் விளையாட்டு:—**
பங்கேற்பாளர்கள் அனைவரும் வரிசையாக நின்று கைகளை மடக்கி பிணைத்துக்கொண்டு ஒருவரை ஒருவர் விடாமல் முதல் பெண் போகும் இடங்களுக்கு எல்லாம் தொடர்ந்து ஓடிச்சென்றனர். எந்த நேரத்திலும் கைகளை விடாமல் ஒட வேண்டும் என்பது தான் விளையாட்டின் நிபந்தனை.
**விளையாட்டின் மூலம் வெளிவந்தவைகள்:**
ஒருவருக்கு எதிர்பாரா விதமாக முகத்தில் அடிப்பட்டு விட்டது. இருவர் அவரை தூக்கி நடத்தி வந்து மருத்திட்டனர். உடனடியாக முதல் உதவி செய்யப்பட்டது. இந்த விளையாட்டின் மூலம் தெரிந்து கொண்டது என்னவென்றால் கேள்விகள், தலைவியானாலும் அவரிடம் கேட்கப்பட வேண்டும் என்பது தான். ஏனென்றால் தலைவி எங்கு அழைத்து சென்றாலும் கூடவே ஒடி சென்றனர். கேள்விகள் கேட்கப்படவில்லை, வயதானவர்களும் இந்த விளையாட்டில் இருந்தனர். மற்றவர்கள் பற்றி எண்ணாமல் தலைவியின் பின்னால் அனைவரும் ஒடினர். மேலும் இந்த விளையாட்டின் மூலம் ஒற்றுமையாக ஒரு சேர முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் கருத்துகள் வெளிவந்தன.

**மூன்றாம் விளையாட்டு:—**
தரையில் நாய், குதிரை, மீன், குரங்கு, யானை, பாம்பு, தவளை இவற்றின் பெயர்கள் எழுதி ஓட்டப்பட்டு இருந்தன. இதில் யார், யார் எதை மனதில் நினைத்து கொள்கிறீர்களோ அவ்விதமாக நினைத்துக் கொள்ளுங்கள் என்றார். ஒவ்வொரு உயிரினத்திற்கும் உள்ள குணநலன்களை பயிற்சியாளர் பட்டியலிட்டார்.

**தவளை:—**

தவளை தன் வாயாலேயே கெட்டுப்போகும், தான் இருக்கும் இடத்தை அடையாம் காட்டும் தானாக மாட்டிக்கொள்ளும் இப்படிப்பட்ட குணங்கள் தவளை—ஐ நினைத்தவர்களுக்கு என்று கூறப்பட்டது.

**யானை:—**

யானை பலம் மிக்கது தான். ஆனால் யார் வேண்டுமானாலும் தன் வேலைக்காக அதை பயன்படுத்திக் கொள்ளலாம் என்றார். உதாரணமாக: மரங்களை தூக்க சொன்னால் யானை அந்த வேலையை செய்யும்.

**குரங்கு:—**

குரங்கு பிடி என்பார்கள். அதாவது பிடிவாத குணம் உள்ளவர்களாக இருப்பார்கள் என்றார்

**மீன்:**

தண்ணீரில் மட்டும் தான் வாழும், மீன் ஐ நினைத்தவர்கள் சிறய விஷயத்திற்க்கும் உடனடியாக அழுதுவிடும் குணமுடையவர்கள் என்றார்.

**குதிரை:—**

குதிரை வேகமாக ஒடும், பழகும் விதத்தில் விசுவாசம் ஆனது. வளர்ப்பை பொறுத்து அமையும் என்ற கூறினார்.

**பாம்பு:—**

நேராக இருந்து எதிரியை கொள்ளாது, மறைமுகமாக நின்று தாக்கும். ஆகையால் பாம்பு—ஐ நினைத்தவர்கள் மிக மிக கெட்டிகாரர்களாக இருப்பர் என்றார்.

விளையாட்டிற்கு பிறகு மூன்று மூன்று பேராக பிரிக்கப்பட்டனர். இரண்டு இலங்கை பங்கேற்பாளர்களும் ஒரு குழுவில் இருந்தனர். ஒவ்வொரு குழுவும் தனது வாழ்க்கையில் சில விஷயங்களுக்காக தந்திர யுக்திகளை பயன்படுத்தியிருப்பர். அப்படி அவர்கள் வாழ்க்கையில் நடந்து நிகழ்வை பற்றி குழு விவாதத்தில் பேசி பின்னர் அனைவரது முன்னிலையிலும் கருத்துக்கள் பகிர்ந்து கொள்ளப்பட்டது. இதில் பெண்களுக்கு உருவாகும் மன தைரியம், தன்னம்பிக்கை எடுத்துரைக்கப்பட்டது. பங்கேற்பாளர்கள் மூன்று குழுவாக பிரிக்கப்பட்டனர். ஒரு குழுவின் வீதம் 10 பேர் இருந்தனர். ஒவ்வொருகுழுவிற்கும் ஒவ்வொரு தலைப்புகள் வழங்கப்பட்டது.

**குழு- 1 (பெண்கள் மற்றும் ஆண்கள் முரண்பாட்டின் போது எவ்வாறாக பாதிக்கப்படுகின்றன)**

— உடல் உள ரீதியாக பாதிக்கப்படுகின்றன
— ஆண்கள் கட்டாயமாக போருக்கு உட்படுத்தப்படுகின்றன
— சமூக ரீதியான பாதிப்பு
— பொருளாதாரம்
— விரும்பிய உணவு வாங்குவதற்க்கான வசதியின்மை தேவையான பொருட்கள் வாங்கமுடியாத சூழல்
— பெண்கள் தலைமைத்துவம் ஏற்று நடத்தும் குடும்பங்கள் எண்ணிக்கை அதிகரிப்பு
— வாழ்வாதாரம் பின்னடைவு

**குழு— 2: (பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் எவ்வாறாக பாதிக்கப்படுகின்றன)**

— பாதுகாப்பற்ற சூழல்
— தனித்துவமின்மை
— இரண்டாம் தரப்பினராக பார்க்கப்படுதல்
— கல்வி வேலை போன்றவற்றிற்கான வாய்ப்புகள்யின்மை
— நடமாட்டம், உழைப்பு போன்றவை கட்டுபாடு
- அதாவது பேச்சு ( ம) கருத்து சுதந்திரமின்மை
— உடல்உள ரீதியான பாதிப்பு

— பாலியல் துன்புறுத்தல்கள்
— சிறுமி துஷ்பிரயோகம்
— சுகாதார வசதிகள் இன்மை
— விருப்பமற்ற கர்ப்பம் /கருத்தடை
— பொருளாதார ரீதியான நெருக்கடி
— குடும்ப வன்முறை
— இளவயது திருமணம்

**குழு- 3 - (சமூகம் மற்றும் வர்த்தக ரீதியாக எவ்வாறு பாதிக்கப்படுகின்றன மிகமிக வறுமையானவர்கள்)**
— கல்வி நிலைபாதிப்பு
— அடிப்படை தேவைகள் பாதிப்பு
— தொழில் இன்மை
— ஒதுக்கப்பட்ட நிலை
— திருமணம் பாதிப்பு
— போசாக்கு நிலை குறைவு
— உளரீதியான பாதிப்பு
— பாலியல் துஷ்பிரயோகம்
— வெளிதொடர்படல் நிலை குறைவாக இருக்கும்

**வசதியானவர்கள் :—**
— குற்ற உணர்வு — மனஅழுத்தம்
— பாலியல் வன்முறை மறைக்கப்படும் குற்றங்களில் இருந்து தப்பித்துக்கொள்ளலாம்
— முறைசாரா குற்றச் செயல் ( கருக்கலைப்பு)
— சமூகம் தொடர்பான பிரச்சனைக்கு முகம் கொடுப்பது அதிகம்
— சிறந்த தொடர்புடல்

NAWO – National Alliance for Women என்ற நிறுவனத்தால் 2009-ம் ஆண்டு நவம்பர் மாதம் புது தில்லியில் பெண்கள் பாராளுமன்றமும், 2010-ம் ஆண்டு மார்ச் மாதம் சென்னையில் பெண்கள் சட்டமன்றமும் நடத்தி காட்டியது. இதில் பெண் அமைச்சாகள், சட்டமன்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பெண்களே. இந்நிகழ்வுகளின் போது எடுக்கப்பட்ட வீடியோ காட்சிகள் அனைவருக்கும் காட்டப்பட்டது. பெண்களால் அரசியலிலும் சாதிக்க முடியும் என்பதை இந்நிகழ்ச்சிகள் எடுத்துக்காட்டியது.

## பயிற்சி குறித்த கருத்துக்கள் மற்றம் தொடர் நிகழ்வு பங்கேற்பாளர்களுடன் கலந்துரையாடல் மற்றும் நிறைவு விழா திருமிகு.பிம்லா சந்திரசேகர்

பயிற்சி பட்டறையில் இறுதி நாளான பத்தாம் நாள் அன்று காலை ஒன்பது நாட்கள் பயிற்சி பற்றிய மீள் ஆய்வு நடைபெற்றது. நந்தினி என்ற பெண் இயக்குநரால் இயக்கப்பட்ட ''திருதிரு துறுதுறு'' என்ற தமிழ் திரைப்படம் பார்க்கப்பட்டது.

பயிற்சியை பற்றிய கருத்துக்கள் பங்கேற்பாளர்களிடம் கேட்டறியப்பட்டது. பின்னர் தமிழ்நாடு மற்றும் இலங்கை பங்கேற்பாளர்களிடம் தனித்தனியே செயல்பாட்டு திட்டங்கள் திட்டமிடப்பட்டது.

**பயிற்சி நிறைவு விழா:**

பயிற்சி நிறைவு விழாவில் பங்கேற்பாளர்களே தங்களுக்குள் சான்றிதழ் மற்றும் நினைவு பரிசு வழங்கி கொண்டனர். இப்பயிற்சியின் தொடர்செயல்பாடுகளில் தங்களை இணைந்து கொள்வோம் என்ற உறுதியுடனும், புரிதலுடன் பங்கேற்பாளர்கள் தங்கள் இருப்பிடத்திற்கு திரும்பிச் சென்றனர்.